உ

சிவமயம்


# சைவநீதி

# SAIVANEETHI

| மலர் 9 | பார்த்திப - மார்கழி | December - January 2006 | இதழ் 9 |
|---|---|---|---|






நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ!

\- திருவாசகம் -

ரூபா 25/=

# பொருளடக்கம்

பக்கம்

1. நலம் தரும் பதிகங்கள் ............ 2
2. உருவ வழிபாடு ............ 3
3. உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனை கள்ளமில்லா அன்பு நெறி நின்று அறியலாம் ............ 6
4. நாவுக்கரசரின் நல்வாக்கு ............ 9
5. சர்வ சமய சக்கரவர்த்தி ............ 12
6. சந்திரசேகர மூர்த்தம் ............ 13
7. சைவசமயக் கிரியைகளின் இன்றியமையாமை ............ 15
8. கலை வாய்மைக் காவலனார் காதலித்த கயிலைக் காட்சி ............ 16
9. திருவாசகத்தில் ஒரு வாசகம் ............ 19
10. சைவத்தின் மேன்மையும் சைவ வாழ்வும் ............ 22
11. குத்து விளக்கின் தத்துவம் ............ 25
12. தமிழ்ப்புலமை ............ 27

*வான நாடரும் அறியொ ணாதநீ*
*மறையின் ஈறுமுன் தொடரொ ணாதநீ*
*ஏனை நாடருந் தெரியொ ணாதநீ*
*என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா*
*ஊனை நாடகம் ஆடு வித்தவா*
*உருகி நானுனைப் பருக வைத்தவா*
*ஞான நாடகம் ஆடு வித்தவா*
*நைய வையகத் துடைய விச்சையே.*

திருவாசகம்

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்

உ
சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

# சைவநீதி



**மலர் 9 பார்த்திப - மார்கழி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 09**

**தொடக்குனர்:**

கலாபூக்ஷணம், ஞானசிரோமணி, சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**

**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**

**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**

**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**

**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு - 04.

தொடர்புகட்கு : *7.30 p.m. to 7.30 a.m.*
தொலைபேசி : 2580458

உ

## இன்னந்துயிலுதியோ?

மார்கழி மாதம் இறை வழிபாட்டிற்கு உரிய சிறந்த மாதம் அதனால் திருமணம் போன்ற சுப கருமங்களை விலக்கி, இம் மாதத்தில் இறை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

மானுட வருடமொன்று தேவர்களுக்கு ஒரு நாள். இதில் வைகறைப் பொழுது மார்கழி மாதம். இம் மாதத்தில் அதிகாலையிற் செய்யும் பூசை வழிபாடு என்பன மிகுந்த பயன் தரும்.

மார்கழி மாதம் அதிகாலையிற் பெண்கள் நீராடி வீட்டு முற்றத்திலே மாக்கோலமிட்டு பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவர். அதிகாலையில் அடியார் கூட்டம் மாதேவன் வார் கழல்களை வாழ்த்திப்பாடி வீதிவழிச் செல்வர். கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே! இன்னந்துயிலுதியோ? விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிப் பணிவதற்கு எழுந்து வா எனப் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிப் பாவை நோன்பு நோர்க்கும் காலமும் இம்மாதத்தில்தான்.

மார்கழித் திருவாதிரைக்கு முதல் ஒன்பது நாளும் திருவெம்பாவையை ஓதுதல் வேண்டும். திருவாதிரையில் திருவெம்பாவை ஓதிய பின்பு தேவாரம் முதலிய பஞ்ச புராணம் ஓதுதல் வேண்டும்.

தேவர் கனாவிலும் கண்டறியாத பரம் பொருளை அறிவதற்கு அடைவதற்கு ஏதுவான இடம் இவ்வுலகு, அதனால் புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே என்று திருமாலும் பிரமனும் எண்ணுகின்றார்கள்.

விண்ணகத்தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருள் எமக்கு அருளும் பொருட்டு மண்ணுலகில் எம்மை வாழச் செய்த பெருங் கருணையை எண்ணி வாழ்த்தி வணங்குவோமாக!

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 7

### தடைப்பட்ட திருமணம் (பெண், ஆண் அனைவருக்கும்) இனிதே விரைவில் நடைபெற அன்புடன் ஓதவேண்டிய பதிகம்

சம்பந்தர் திருமருகலில் எழுந்தருளியுள்ள மாணிக்கவண்ணர் கழலினை வணங்கும் பொருட்டு ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்தார். அது சமயம் வணிகப் பெண்ணின் அழுகுரல் அவரது செவியில் விழுந்தது. அந்நாளில், வணிகன் மகள் ஒருத்தி, தன்னை மணம்புரிய இருந்த ஒருவனுடன் மடத்தில் துயின்றாள். இரவில் பாம்பு கடித்து மணமகன் இறந்து போனான். இத்துயரம் நீங்கி, இறந்தவன் எழுந்து திருமணம் இனிதே நடக்க அருளும்படி சம்பந்தர் இறைவனை வேண்டிப் பாடிய பதிகம் இது. பதிகம் முடிந்ததும் இறந்தவன், உறங்கியவன் எழுவது போல எழுந்தான். திருமணமும் முடிந்தது. இன்றும், திருமணமாகாதவர்கள் இப்பதிகத்தைப் பாடி பலன் பெற்று வருகின்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

**திருமருகல்** **பண்: இந்தளம்**

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே. 1

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. 6

வழுவாள் பெருமான் கழல் வாழ்களன
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாத தொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே. 9

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே. 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே. 11

**திருச்சிற்றம்பலம்**

# உருவ வழிபாடு தத்துவம்

**சுவாமி சாந்தாநந்தா**

தாங்கள் அறிந்தவை எப்படிப் பிறரும் அறியச் செய்வது என்பதும், தாங்கள் பெற்ற அனுபவம் எப்படிப் பிறரும் அனுபவிக்கச் செய்வது என்பதும், தங்களுக்குப் புரிந்தவை. எப்படி பிறரையும் புரிந்து கொள்ளச் செய்வது என்பதுமே நம் பழங்கால ரிஷிகளது அடுத்தபடியான பிரச்சனையாகும்

**'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறை பொருள் ...............**
**.......................................... மந்திரம்**
**தான் பற்ற பற்ற தலைப்படும் தானே'**

- திருமூலர் - (திருமந்திரம்)

"பேரின்பத்தை நான் பெற்றேன்; அதை உலகில் உள்ள நீங்கள் அனைவரும் கூடப் பெற்றுக் கடைத் தேற வேண்டும்." என்றனர் திருமூலர் என்னும் ரிஷி

**'ததந்தரஸ்ய ஸர்வஸ்ய**
**தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத;'**

(உபநிஷதம்)

உடம்புக்கு வெளியே பரவி நிற்கும் மெய்ப்பொருளை உடம்புக்கு உள்ளேயும் கண்டு அனுபவிப்பதற்கு நம் உடம்பின் உணர்வைக் கொண்டு உள்ளும் புறமும் இரண்டற்ற பாவனையில் தியானிப்பதே, இதுவே ரிஷிகள் கண்ட பேரின்பம்.

ஒரு கல்யாண வீட்டில் ஒரு நண்பர் லட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.. அருகில் இருந்த ஒருவர். " என்ன சார், லட்டு எப்படி இருக்கிறது" என்று கேட்டார்.

"ஓ ரொம்ப பிரமாதம் "

"பிரமாதம் என்றால் என்ன சார்?"

"பிரமாதம் என்றால் ரொம்ப இனிமை"

"ரொம்ப இனிமை" என்றால் என்ன?"

"இனிமை என்றால் ருசி என்று அர்த்தம் "

"ருசி" என்றால் ....... அதை எப்படி விவரிக்க முடியும். உடனே லட்டை சாப்பிட்டுக் கொண்டிருந்த நண்பர் அவருக்கும் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அதைச் சாப்பிட்டவர் முகம் மலர்ந்தது. உடனே அந்த நண்பர் "என்ன சார் லட்டு எப்படி இருக்கிறது" என்றார்.

"ஓ ரொம்ப பிரமாதம்"

"பிரமாதம் என்றால் என்ன சார்?"

"பிரமாதம் என்றால் ரொம்ப இனிமை"

"ரொம்ப இனிமை என்றால்?"

"என்ன சார் நான் கேட்டதையே நீங்களும் கேட்கிறீர்கள்?"

**'கண்டவர் விண்டிலர்**
**விண்டவர் கண்டிலர்'**

- திருமூலர் - (திருமந்திரம்)

மெய்ப்பொருளைத் தம்முள் பார்த்தவர்கள் எடுத்துச் சொல்ல முடிவதில்லை; அப்படி ஒருவாறு எடுத்து விளக்கிச் சொல்லப் பிரயத்தனம் செய்தால், நேரடியாக அவர்களால்

**கூறாமை நோக்கி க்குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி** 701

அரசன் கருதிய காரியத்தை அவன் கூறாமலே அவன் முகத்தை நோக்கி அறியவல்ல அமைச்சன், எக்காலத்திலும் வற்றாத கடலைத் தன்னுள் கொண்ட உலகத்தில் வாழ்பவர்க்கு ஓர் அணிகலன் ஆவான்.

விளக்கிச் சொல்லத் தெரிவதில்லை. அவர்களது இந்நிலை ஓர் அதிசயமான கனவைக் கண்ட ஓர் ஊமை உளறுவதைப் போன்றதுதான். கனவொன்று கண்டதைக் கூட அவ்வூமையினால் பிறர் அறியச் சொல்ல முடிவதில்லை.

**'அவிக்ஞாதம் விஜாநதாம்**
**விக்ஞாதம் அவிஜாநதாம்**
**- கேனோபநிஷத் -**

**'.............................**
**மன வாக்குச் செயலாலே**
**அடைதற்கு அரிதாய்,**
**அரு உரு வாகிஒன்று போலே**
**இருக்கும் பொருளை எவ்வாறு**
**புகல்வதுவே'**

**- அருணகிரிநாதர் - (கந்தரலங்காரம்)**

வார்த்தைகளால் விவரிக்க முடியாத அவரவரது சாதாரண அனுபவத்தையும் கூட, மற்றவர்களுக்கு, ஒருவாறு புரியச் செய்வதற்கே, பலவார்த்தைகள் தேவைப்படுகிறது. அப்படிச் சொல்லியும் கூட அவர் அதை முழுமையாகப் புரிந்து கொண்டாரா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதே அனுபவத்தை முழுமையாக உணர ஒரே ஒரு வழி தான் உள்ளது. அதாவது அந்த அனுபவத்தை அவரே அடைவதுதான்.

**'அவ்வாறு அறிவார் அறிகின் றதுஅலால்**
**எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே'**
**- அருணகிரிநாதர் - (கந்தர் அனுபூதி)**

இவ்வாறாக ரிஷிகளும் முனிவர்களும் அவர்கள் பெற்ற ஞான அனுபவத்தை, பரஉணர்வை அதாவது மனோ வாக்குக்கு எட்டாத சித் உருவான பேரொளியைப் பாமர மக்களும் உணரும்படி செய்வது அரியதோர் பிரச்சனையாக இருந்த காரணத்தால், உருவமற்ற இறைவனுக்கு உருவ வழிபாடு கற்பித்தார்கள். அத்துடன் கூட வெவ்வேறு கதைகளும், உதாரணங்களும் கொடுத்தனர்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த இறை தத்துவத்தை விளக்குவதற்கு விக்ரஹங்களைச் சாதனமாக அமைத்தார்கள். மேல்நாட்டினரும், மேல் நாட்டு நாகரிகத்தில் பிறந்து அதில் ஊறி வளர்ந்த இந்து மதத்தைச் சேர்ந்த மக்களும் இந்துக்கள் பல தெய்வங்களையும் வழிபடுகின்ற மூடச் சமுதாயம் என்று தவறாக நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் மேல் நாட்டவர் இந்து மதத் தத்துவத்தின் ஆழத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால்தான் எனலாம். மேலும் அப்படி ஆழ்ந்த அனுபவம் இல்லாமல் இந்து மதத்தைப் பற்றி எழுதிய மேல்நாட்டுப் புத்தகங்களைப் படித்துவிட்டு நம் படித்த இந்து மக்களும் இவ்வாறான தப்பான எண்ணத்திற்கு வந்து விட்டார்கள். உண்மையில் பார்க்கின்ற பொழுது, இந்துக்களின் கோட்பாடு எங்கும் நிறைந்த இறைவன் ஒருவனே; இருதயத்தினால் உணரும் பொழுது, அப்பரம் பொருள் மனித உருவமாகவும், அறிவினால் ஆராயும் பொழுது அப் பரம்பொருள் உருவமற்ற சக்தியாகவும், பேரறிவாகவும் திகழ்கிறது. உருவமற்ற பரம்பொருள் ஒன்றேதான். ஆனால் அதன் வழி பாட்டு முறையும் உருவங்களும் பலப்பல, சுமார் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முன்னால் எழுதிய 'ரிக்' வேதத்தில்

**'ஏகம் தத் விப்ரா பஹுதரவதந்தி'**

**ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்** **702**

ஒருவனது மனத்தில் உள்ளதை ஐயப்படாமல் அறியவல்லவனை அவன் வடிவால் மனிதனேயானாலும் மதிநுட்பத்தால் தெய்வம் போன்றவன் என்று கருதி, அதற்கு ஏற்ப மதித்துப் போற்ற வேண்டும்.

என்று கூறப்பட்டுள்ளது. அதாவது மெய்ப்பொருள் ஒன்றேதான்; உருவமற்ற அதைப் பல உருவங்களாக ஞானிகள் விவரிக்கின்றனர். இதைத்தான் மாணிக்கவாசகர்.

"..............................

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு,
ஆயிரம் திருநாமம் பாடி நாம், தெள்ளேணம்
கொட்டாமோ!" என்றனர்.

எனவே பழங்கால ரிஷிகளும், முனிவர்களும் தாங்கள் நேரில் சொல்லமுடியாதனவற்றை, சில உவமான உவமேயங்கள் மூலமாகவும், சில மறைமுக உதாரணங்கள் மூலமாகவும் சில அறிகுறிகள் மூலமாகவும், சில விக்ரஹங்கள் (உருவங்கள்) மூலமாகவும் நமக்குச் சொன்னார்கள். மேலும் நமது உணர்வைத் தூண்டி விடக்கூடிய பல உயர்ந்த உபதேசங்களாலும், அனுமான விளக்கங்களாலும் நாம் பரம்பொருளை அடைய வழிகாட்டியுள்ளார்கள்.

**'விறகில் தீயினன்; பாலில் படுநெய் போல்,**
**மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக, வாங்கிக் கடையமுன் நிற்குமே.'**

- திருநாவுக்கரசர் - (தேவாரம்)

எனவே இவ்வாறாக ரிஷிகள் ஒரு பிரமாண்டமான பொருள் அல்லது விஸ்வவஸ்து உள்ளது என்றும், அது விஸ்வப் பொருளாதலால் அது பூர்ணமாய், நிலையானதாய் எப்போதும் ஒரே தன்மைத்தாய், ஒரு வித மாறுதலும் சலனமும் அற்றதாய் உள்ளது என்றும், அதனுள் உள்ள ஒவ்வொரு பொருளும் நகர்ந்தாலும், தான் நகராதுபோல் சலனமற்ற நிலையில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

**'ததேஜதி தன்னைஜதி**
**தந்தூரே தத்வந்திகே'**

**ஈசாவாஸ்யோபநிஷத்**

அவ்விஸ்வப் பொருளானது அப்பாலுக்கு அப்பாலும், இப்பாலுக்கு இப்பாலும், இருக்கின்றது; அது தூரமாகவும், அதே சமயம் நெருங்கியும் உள்ளது; அது உள்ளும் புறமும் உள்ளது.; அது நகராது சலனமற்றும் , நகர்ந்து சலனமுற்றதாகவும் உள்ளது.

**'அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்.....'**

- ஔவையார் - (விநாயகர் அகவல்)

**'அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்**
**ஒத்தவு மாமீசன் தானான வுண்மையே'**

திருமூலர் - (திருமந்திரம்)

**'அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை....'**

- திருநாவுக்கரசர் - (தேவாரம்)

**'சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்**
**துரிய நிறை சுடராய் எல்லாம் ......'**

- தாயுமானவர் -

அவன் எங்கும் நிறைந்தவன்; அப்படியானால் எப்படி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுதல் கூடும். எல்லா வஸ்துக்களும் நகர்ந்து கொண்டே உள்ளது. எனவே அதனுள் உள்ள அவனும் நகருகிறான் என்றே கொள்ளலாம். மக்களுடைய எண்ண அலைகளையும், அறிவாற்றலையும் தூண்டிவிட, ரிஷிகளும், முனிவர்களும் சாதாரணமாகப் பார்ப்பதற்கு எதிர்மறையாகத் தோற்றமளிக்கும் விளக்கங்களையும் தந்துள்ளனர்.

(மிகுதி அடுத்த இதழில் ......)

**குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்** 703

ஒருவரது முகக்குறிப்பினால் அவரது உள்ளக் குறிப்பை அறியவல்ல அமைச்சரை, அரசர் தம் பத்து உறுப்புகளுள் எதை அவர் கேட்டாலும் கொடுத்துத் தமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

# உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனை கள்ளமில்லா அன்பு நெறி நின்று அறியலாம்.

**பேராசிரியர் பொ. திருஞானசம்பந்தர்**

சைவ சித்தாந்தத்திற்கு மூல நூல்களாக உள்ளவை வேதம், சிவாகமம் திமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவை. "ஆரியந் தமிழோடு இசையானவன்" (திருக்கடம்பத் துறைப் பதிகம் ஐந்தாந் திருமுறை) என்று அப்பர் பெருமானும் 'ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே' (திருமந்திரம் 65) என்று திருமூலரும் கூறியவை காண்க. மேலும் 'வேதமோ, டாகமம் மெய்யாம் இறைவன் நூல் ஓதும் பொதுவுஞ் சிறப்பும் என்றுள்ளன. நாதன் உரையவை நாடில் இரண்டுந்தம், பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே' (திருமந்திரம் 2397) என்ற திருப்பாடலும், 'வேத சிவாகம யோர் பேதம் பச்யாமஹ' என்ற சிவாத்து விதியான ஸ்ரீகண்டரின் கூற்றும் நம் மூல நூல்கள் நம் பாரததேசத்தின் பண்டை வளமான மொழிகளான வடமொழி தென் மொழிகளில் அமைந்திருப்பதற்குச் சான்று பகர்வன.

'அன்பே சிவம்' என்ற கொள்கையினரான சைவ சித்தாந்திகளுக்குச் சிவனடிப் பேற்றிற்கு அன்பு நெறி எவ்வளவு இன்றியமையாததாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது தானே போதரும்' இதை வடநூலார் 'பக்திமார்க்கம்' என்பர். இறையன்பு வேண்டின் அதற்கு இறைவன் திருவருள் வேண்டும். ஒரு பொருள் மீது அன்பு உண்டாக வேண்டுமானால் அப்பொருள் பற்றிய அறிவை முன்னதாகப் பெற வேண்டும். அறியாத ஒன்றின் மீது அன்பு செலுத்த முடியாது. சிவனாம் பரம் பொருள் பற்றிய அறிவைப் பெறவேண்டுமானால் அதற்கு அவன் திருவருள் இன்றியமையாது வேண்டும். சொற்களாலோ அறிவுத் திறத்தாலோ நிரம்ப சாத்திரங்களைப் படிப்பதாலோ மட்டும் அவனை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. அவன் திருவருளுக்கு எவன் பாத்திரமாகிறானோ அவனாலேயே அவனை அறிய முடியும். இக் கருத்தைக் கடோபநிடதம் 'நாயம் ஆத்மா ப்ரவசனேன லப்யஹ நமேதயா; நபஹு"நா ச்ருசேன யமேவ ஏஷ வருணுதே தேநலப்யஹ' என்று கூறுகிறது. அவன் அருளால் அவன் தாள் வணங்குதல் வேண்டுமேயல்லாது பிற வழி இல்லை காமிகாகமமும் 'ஒரு மனிதன் என்றும் தனது சாமர்த்தியத்தாலேயே திருவடிப்பேறு எய்த முடியாது அல்லல் அறுப்பானாகிய சிவனருள் இன்றி இது கிட்டாது' என்று கூறுகிறது.

உயிரின் நாட்டம் இயல்பாக உலகியற் பொருள்களின் மீது ஐம்பொறிகளின் வாயிலாகச் செல்கிறது. புறத்தே செல்லாமல் இருக்க வேண்டுமானால் ஐம்பொறிகளையும் உள்முகமாகத் திருப்பி உள்ளத்தாமரையில் வீற்றிருக்கும் பரம்பொருள் மீது பற்று வைக்க வேண்டும். இக்கருத்தைத்தான் வள்ளுவர் பெருமானும்,

**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'** (குறள் 350) என்றார்.

**குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை**
**உறுப்புஓர் அனையரால் வேறு** **704**

ஒருவர் மனத்தில் கருதியதை அவர் கூறாமலே அறிய வல்லவரோடு, மற்றவர் உறுப்பால் ஒர் தன்மையராக ஒத்து இருந்தாலும், மதிநுட்பத்தால் வேறுபட்டவர் ஆவர்.

சேக்கிழார் பெருமானும் இதே கருத்தைச் செப்பற்கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல் பற்றி, எப்பற்றினையும் அறவெறிந்தார். எல்லை தெரிய ஓண்ணாதார், மெய்ப் பக்தர்கள் பால் பரிவுடையார் எம்பிரானார் 'விறன் மிண்டர்' (திருத்தொண்டர் புராணம்' விறன் மிண்டர், 4) எனக் கூறிப் போற்றார்.

இறைவன் பால் அன்பு செலுத்துதல் என்பது பல வகையது. அவன் எங்கும் நீக்கமறநிறைந் திருக்கும் இயல்பினனாதலால் உயிரினங்கள் அனைத்திடமும் அன்பு பூண்டொழுகுவதும் அன்பு நெறி யேயாகும். 'எவனொருவன் எல்லா உயிர் களுக்கும் உயிராய் உடனுறையும் ஒருவனைக் கருதி அவ்வுயிர்கள் மாட்டு அன்பு செலுத்தாமல் கோவில் பிரதிமை ஒன்றையே வணங்குகிறானோ அவன் அறியாமையால் வேள்வித் தீயில் ஆகுதியைப் பெய்யும் அறிவிலிக்கு ஒப்பாவான்' என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. கண்ணன் இக் கருத்தைக் கீதையில் அருள்கிறான். (எந்த இறைவன் எல்லா உயிர்களிலும் உறைகின்றானோ எல்லா உயிர்களும் எந்த இறைவனிடம் ஒன்றி யிருக்கின்றனவோ அந்த இறைவன் பக்தி ஒன்றி னாலேயே அடையத் தக்கவன்.) கீதை - 8-22)

மாணிக்கவாசகர் போன்றோர் 'ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப், பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந் தாரை மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர் சிலிர்ப்பக், கூசியே உடல் கம்பித்திடுவார். (திருத் தொண்டர் புராணம் பத்தராய்ப் பணிவார் 6)

இறைவனை இடையறாது சிந்திப்பது அச்சிந்தனையால் உள்ளம் உருகுவது; அவன் செயலை விதந்து பேசுவது, அவன் புகழைப் பாடுவது; அவன் திருமேனியை மலர்களைத் தூவி வழிபடுவது. திருக்கோயிலை மெழுக்கிடுவது முதலாகப் பக்தர்கள் பல வழிகளில் சிவபெருமானை வழிபட்டிருக்கிறார்கள். அவரவர் ஆன்ம பக்குவ நிலைக்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நெறிகளில் நின்று இறைவன் திருவடி, எய்திய அருந் தொண்டர் களின் வரலாற்றினைச் சேக்கிழார் பெருமான் அருளியிருக்கின்றார்கள்.

உள்ளார்ந்த பக்தியையே இறைவன் போற்றுகின்றான் என்பதைக் கண்ணப்ப நாயனார் வரலாற்றிலே நாம் காண்கின்றோம் 'திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கால் வினை இரண்டும் சாருமல மூன்றும் அற அன்பு பிழம்பாய்த் திரிவார்.' கண்ணப்பர் என்று சேக்கிழார் அருளிச் செய்தார். (கண் நா. 154) காளத்தியப்பர் திருமுகத்தில் கண்ணினின்றும் பெருகும் குருதியைக் கண்டு பொறாத கண்ணப்பர் தன் கண்ணைப் பிடுங்கி அப்பிய அன்பின் உறைப்பை என்னவென்பது வாயே கலசமாகக் கொண்டு வாய் நீரால் பெருமானுக்கு அபிடேகம் செய்த அன்புச் செயலை 'மார்க்காலரத் தித பாதுகா' என்று தொடங்கும் சிவானந்த லஹரி பாடலில் (63) ஆதிசங்கரர் போற்றி அவரை 'பக்தாவதம்சர்' (பக்தர்களுக்கெல்லாம் அணியானவர்) என்று வர்ணிக்கிறார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மையை' மாணிக்கவாசகர் குறிப்பிட்டு தன்னிலும் மேலானவராக அவரைப் போற்று கிறார். (திருக்கோத்தும்பி 4) 'வாய் கலசமாக வழிபாடு செய்யும் வேடனை' திருஞான சம்பந்தரும் திருக்காளத்தித் திருப்பதிகத்தில்

**குறிப்பிற் குறிப்புணரா ஆயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்** **705**

பிறர் முகத்திலுள்ள குறிப்புகளைக் கண்டும், அவற்றால் அவர் உள்ளக் குறிப்புகளைக் காணமாட்டாதவையானால் ஒருவன் உறுப்புகளுள், காண்பதையே தொழிலாகக் கொண்ட கண்கள் வேறு என்ன வகையில் பயன்படுவனவாம்?

போற்றியுள் ளார். (மூன்றாம் திருமுறை திருக்காளத்தி 4)

மலர்களைக் கொண்டு வழிபடுவதால் மட்டும் பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமாகிவிட முடியாது. எந்த உளப்பாங்கோடு வழிபடுகிறோம் என்பது தான் கருதத்தக்கது. மன்மதன் தன் ஐந்து மலர்களைச் சிவபெருமான் மீது அகந்தையோடு போட்டான். எரிந்து சாம்பரானான். பார்வதி தேவி ஆரா காதலால் சிவபெருமானுக்கும் அன்புமலர் கொண்டு பணி விடை செய்தாள். பெருமான் உடலில் பாதியைப் பெற்றாள். இவ் வரலாறு காளிதாசனுடைய குமார சம்பவத்தில் பேசப்படுகிறது. ஆழ்ந்த தூய அன்பே வேண்டற்பாலது என்பதை உணர்கிறோம்.

நம் உள்ளத்தே நின்று உணர்வூட்டும் இறைவனைக் காண்பது எப்படி என்பதை அப்பர் பெருமான் திருக்குறுந் தொகையில் அருள்கின்றார். 'விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல், மறைய நின்றுளன். மாமணிச் சோதியான், உறவுக் கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே' 'உணர்வு' என்ற சொல்லால் 'அன்பு செயும் வகையை' உணர்த்துகிறார் அப்பர் பெருமான். ஞானசம்பந்தரைப் போல வேத உபநிடதங்களைக் கற்றிருத்தல் கூடும். மேற்கூறிய கருத்தை சுவேதாகவா உபநிடதத்தில் காண்கிறோம். எள்ளில் மறைந்திருக்கும் எண்ணெய்யைச் செக்கில் ஆட்டி எடுப்பது போல தயிரில் வெண்ணையைக் கடைந் தெடுப்பது போல, பூமிக்கடியில் உள்ள ஊற்று நீரைக் குடைந்து எடுப்பது போல உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனை மீண்டும் மீண்டும் சிந்திப்பதன் வாயிலாக உணர்வினில் காணலாம்.

மெய்யன்பர்கள் இறைவன் பால் தமக்கென எதையும் வேண்டார். "யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால் அன்பும் அருளும்.." என்றே வேண்டுவர். இப்படிக் கூறுகின்றார், பரிபாடல் ஆசிரியர் கடுவன் இளவெயினனார். மாணிக்கவாசகரும் போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்" என்றும் வேண்டத்தக்க தறிவோய் நீ என்றும் தன் உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்துகின்றார்.

அன்பர் திருக் கூட்டத்தைச் சார்ந்த வரிடையே சாதி, இனம், மொழி, இடம்; என்ற எவ்வித வேறுபாடும் கிடையாது. திருஞான சம்பந்தரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும்; திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும் சுந்தரரும் சேரமான் பெருமான் நாயனாரும் வழி காட்டிகளாக வாழ்ந்து காட்டிய தலையாய மனிதர்கள் சிவனடியே சிந்திக்கப் பெற்ற செல்வர்கள். அவர்கள் காட்டிய அன்பு நெறியிலே நாம் நின்றொழுகுவோமாக!

பூமி, சுவர்ணம், பசு, குதிரை, பாதரக்ஷை, குடை, ஆசனம், வஸ்திரம், தான்யம் இவைகளைத் தனக்குக் கல்வி கற்பித்த குருவுக்குக் கொடுப்பதால் தான் கற்ற அறிவு மேன்மையடைகிறது என்பதோடு குருவின் பரிபூர்ண கடாக்ஷம் கிடைத்து பெயரும் புகழும் ஒருவனுக்கு ஏற்படுகிறது.

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்** **706**

தன்னை அடுத்த பொருளைத் தன்னுள் காட்டும் கண்ணாடி போல ஒருவர் மனதில் தோன்றிய கருத்தை அவர் முகமே காட்டி விடும்.

# நாவுக்கரசரின் நல்வாக்கு

மாணிக்கத்தியாகராஜா பண்டிதர் குமாரசுவாமி
சுன்னாகம்

**வாக்கிற் கருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கிற் திருஞானசம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பரெனச் சொல்.**

அப்பர் சுவாமிகளுடைய பாடல்களில் அவர் சொற்களில் உறுதிப்பாடு மக்கள் ஈடேறுவதற்குரிய நல்லுரைகள் அறுதிட்டு உறுதிப் பாடமையப்பாடியுள்ளார்.

கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த இவர் சம்பந்த சுவாமிகள் காலத்தவர்.சரியை கிரியை, யோகம் ஞானமாகிய நாற்படிகளில் ஒன்றாய சரியை மார்க்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

அழகிய திருமுனைப் பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். பெரிய புராணம் பாடிய சேக்கிழார் திருவாமூரைக் குறிப்பிடும் பொழுது "சைவநெறித் தலமேழும் பாலிக்கும் தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர்" என்கின்றார். புகழனார்க்கு மாதினியார் மணி வயிற்றிற் பிறந்தவர்தான் திருநாவுக்கரசர். இவருக்குத் தாய் தந்தையர் இட்டபெயர் மருணீக்கி. இவருக்கு முன் பிறந்த பெண் திலகவதி, திலகவதியாருக்கு ஒத்த குடி குலம் வந்த கலிப்பகையார் சேனைக்கு அதிபதி. புகழனாரிடம் மணப்பெண் கேட்டு முறைப்படி கலிப்பகை ஓலை கொடுத்தனுப்பினார். பெற்றோர் தம் விருப்பை தெரிவித்தார்கள். மண நாளும் குறிக்கப்பட்டு விட்டது. திருவினை ஒத்த திலகவதியும் மணவினை நாளை எண்ணிக் கொண்டு இருக்கும் வேளை. வடநாட்டில் நடக்கும் போருக்குக் கலிப்பகையாரை உடன் அரசு அனுப்பியது. மறுக்க முடியாத கலிப்பகையார் போருக்கு வடநாடு செல்கின்றேன். வந்து மணம் புரிவேன்." என்று மாமனார் புகழனார்க்கு ஓலை அனுப்பி வைத்து விட்டுப் போய்விட்டார். விவாகம் தடைப்பட்டு விட்டதே என்ற துன்பம் புகழனாரை நாளுக்கு நாள் வருத்தியது. போர் நீண்டு கொண்டு போனது. மணவினை காணாத் துன்பம் காரணமாக புகழனார் நோய்வாய்ப்பட்டார். சிறிது நாளில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். அக்கால வழக்குப்படி மாதினியாரும் பன்னிரண்டு வயது நிரம்பாத பருவப் பெண் திலகவதியையும் குழந்தை மருணீக்கியாரையும் பரிதவிக்க விட்டு வேறேதும் நினையாமல் கணவனே கண்கண்ட தெய்வமெனக் கொண்டவர் நாயகனொடு உடன் கட்டை ஏறிவிட்டார்.

ஆருமற்ற நிலையில் மனந்தேற முடியாத திலகவதியார் உள்ளத்தில் சிந்தனை ஓடுகிறது. "எனக்கு என்பெற்றார் பேசி பொருந்திக் கொண்ட மாப்பிள்ளை இன்னும் சில நாளில் வந்து விடுவார். சிறிது காலம் பொறுத்திருப்போம்" என்று உள்ளத்தில் தெளிவு ஏற்பட்டது. சிறிது காலம் போகு முன்பே நாயகன் போரில் இறந்து விட்டார் என்ற செய்தி வந்தது. திலகவதி இடியோசை கேட்ட நாகம் போல் மயங்கி விட்டார். செய்வதறியாது திகைத்தார். தனக்குரிய நாயகன் இறந்து விட்டார் நானும் அக்கினி மூட்டி அதில் இறப்பேன் எனத் துணிந்து விட்டார். அதற்குரிய ஆயத்தங்களும் செய்தார். இதனைத் தெரிந்த தம்பி மருணீக்கியார் ஓடோடி வந்து "அக்கா, எனக்கு ஆரும் இல்லை நீயும் இறந்தால் நான் என் செய்வேன் எங்கு செல்வேன் அக்கா நீயல்லாமல் எனக்கு ஆருமில்லை. நீ சாக

---

**முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான் முந் துறும்** 707

ஒருவர் இன்னொருவரை விரும்பி மகிழ்ந்தாலும் வெறுத்துச் சினந்தாலும் தான் அவற்றை முன்னதாக அறிந்து, அவற்றைப் பிறருக்கு அறிவிப்பதில், வாயை விட முந்தி நிற்பதால்,முகத்தைப் போல அறிவுமிக்க வேறு உறுப்பு ஏதேனும் உண்டோ?

வேண்டாம். நீ இறந்தால் உன்னோடு என்னையும் கூட்டிப் போ" என்று அக்காவின் காலைக் கட்டி அழத் தொடங்கி விட்டான். இதன் பின்,

திலகவதி நல்லதைச் சிந்தித்து தம்பிக்காக வாழ நினைத்தாள். காலை மாலை எம்பெருமான் வீரட்டானரைத் தோத்திரம் செய்து கொண்டு தம்பிக்காக உயிர் வாழ்ந்து கொண்டு அவனுக்குரிய பணிகளையும் தானே செய்து கொண்டு வீட்டில் தங்கி வாழ்ந்தாள்.

அக்காலம் சமணம் மேலோங்கி இருந்தது. அரசனும் சமண சமயம் சமணப் பள்ளிகள் தலை சிறந்து மிளிர்ந்தன. சமணப் பாடசாலையில் சேர்ந்து மருணீக்கியும் படித்தான். சமண குருமார் மருணீக்கியின் திறமையை கண்டு உயர் கல்வியும் கொடுத்து "தரும சேனர்" என்ற பட்டமும் அளித்துக் கௌரவித்துத் தம் பக்கமாக்கிக் கொண்டனர்.

தம்பிக்காக உயிர் வாழும் தன்னைப் பல்லாண்டாக வந்து சந்திக்கவில்லையே மருணீக்கி என்ற பெருந்துயர் தாக்கப் பக்கலில் இருக்கும் பரம்பொருள் வீரட்டானேஸ்வரனைத் தினந்தோறும் சென்று "வணங்கி எம் பெருமானே கருணைக் குன்றே! ஏழைக்கருள் புரியும் ஏந்தலே! தம்பிக்காக உயிர் வாழ்ந்தேன். அவனோ பொய்யர் போற்றும் புறச்சமயமாகிய சமணம் சேர்ந்து உண்மையறியாது உழல்கின்றான். அவனை மனந் திருத்தி எம்மிடம் சேரவைப்பீர்" என்று நாளும் மனம் நெக்குருகத் திலகவதி வேண்டுதல் செய்து வந்தார்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் கருணைக் கடலாகிய ஈசன் மனம் இரங்கி மருணீக்கியாரை வழிப்படுத்த நினைந்தார். மருணீக்கியார் சூலைநோய் வந்து குடலைப்பிசைந்து குத்தினைத் தரும் நோயைத் தாங்க முடியாது தத்தளித்தார் மருணீக்கியார். சமணர் மயிலிறகு கொண்டு செய்யும் மாந்திரீகமும் பயன் தரவில்லை. வரவரத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை சகோதர பாசம் தலை தூக்கியது. தன் நம்பிக்கைக்குரிய இருவரைத் துணைக்கொண்டு நடுயாமம் புறப்பட்டு அக்காவிடம் வந்து சேர்ந்தார்.

"அக்கா வயிற்றுள் குடல் மேல்கீழாகப் புரண்டு பிசைகிறது. தாங்க முடியாமல் வயிற்றுள் குத்துகிறது. இதைத் தீர்க்க வழி செய்து விடு என் பிழை பொறுத்து விடு! அக்கா தாங்க முடியவில்லையே!" என்று கதறுகிறார்.

திலகவதியார் "இது வீரட்டானனின் கருணையே!" என்று உள்ளத்தால் வணங்கி விடியற்காலை வீரட்டானப் பெருமான் சந்நிதிக்குக் கூட்டிப் போய் வீபூதி வாங்கி பூசை செய்து தோத்திரம் செய் என்றார். முன் வினை சேரதன்னை மெய் மறந்து நோய் தீரப் பாடுகிறார்.

நல்வினை சேர்ந்து விட்டது. நாவுக்கு அரசராகி விட்டார். பாடுகிறார். 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' என்ற பாடற் பதிகம். "யமனைப் போல், யமன் வந்து குடி கொண்டது போல் வயிற்றுள் இருக்கும் நோயை நீக்கி அருள்வீர். எனக்குத் தெரிந்த வகையில் நான் கொடுமை செய்ததாக அறியேன். இப்பொழுது, உன்னிடம் வந்து உனக்கே அடிமையாகிவிட்டேன். என்னை உன் திருவடிக்கே ஏற்றுவிடு. இனியான் இரவு பகல் எப்பொழுதும் வணங்கிக் கொண்டேயிருப் பேன். எனக்கு என்ன என்று சொல்ல முடியாதபடி குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன் வீரட்டானத்துறை எம்மானே" என்று நெஞ்சுருகப் பாடினார். நோய் தீர்ந்தது. நாவுக்கரசரானார். நாயனார் திலகவதியார் மனம் மகிழத் தலங்கள் தோறும் சென்று தேவாரம் பாடியதோடு சரியைத் தொண்டுகள் செய்தார். கோயில் வீதிகளில் காணும் புற்களை அகற்றுவதற்கு உளவாரப் பணி செய்தார்.

**முகம் நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின்** 708

புறக்குறிப்புகளைக் கொண்டு அரசனின் உள்ளத்தை நோக்கி அவ்வுள்ளத்தில் உள்ள கருத்தை அறியவல்ல அமைச்சரைப் பெற்றால், அரசன் அவ் வமைச்சரின் முகத்தை நோக்கி எதிரே நின்றால் போதும் வாய் திறந்து ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை.

சமணர்கள் தங்களிடம் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற மருணீக்கி இப்பொழுது மதம் மாறிச் சைவனாகி விட்டான். இவனை சும்மா விடக் கூடாது என்று தங்கள் அரசனுக்கு உரைத்தார்கள். அரசன் சொற்படி சமணரை அழைத்துத் தண்டம் செய்தார்கள்.

நீற்றறையில் ஏழு நாட்கள் பூட்டி வைத்தார்கள். சாகவில்லை. "மாசில் வீணை" பாடி மகிழ்வோடிருந்தார்.

நஞ்சு கலந்த பால் கொடுத்தார்கள். சாகவில்லை. பட்டத்து யானையைக் கொல்ல அனுப்பினார்கள். யானை வலம் வந்து வணங்கிச் சென்றது. கல்லோடு கட்டிக் கடலில் விட்டார்கள். கல்லு தோணியாக மாறிக் கரை சேர்த்தது. சமணர்களும் துன்பம் செய்வதை நிறுத்தி விட்டார்கள்.

தலங்கள் தோறும் தரிசனம் செய்வதோடு சரியைத் தொண்டும் செய்து கொண்டு வாழ்ந்து வரும்போது சம்பந்தர் ஏறி வந்த பல்லக்கை, சம்பந்தர் அறியாதபடி தூக்கி வந்தார். சம்பந்தர் 'அப்பரைக் காணோமே எங்கே?' என்று கேட்ட போது இங்கே நிற்கிறேன் என்றார். அன்றுமுதல் அப்பரானார்.

திங்களூரில் அப்பூதியடிகளின் மகனின் பாம்பு கடித்த விடத்தைத் தேவாரம் பாடி நீக்கினார். வேதாரணியக் கதவு திறக்கவும், அடைக்கவும் அப்பரும் சம்பந்தரும் பாடினார்கள். கைலைக் காட்சியைத் திருவையாற்றிலே காட்ட, கண்டு களித்தார். இவர் பாடிய தேவாரப் பாடல்களின் ஒரு பகுதிக்குத் திருத்தாண்டகமென்றும் பெயர். உண்மையை உணரவைக்கும் பாடல்கள் இவர் பாடல்கள் 4ம், 5ம் 6ம் திருமுறைகளாகும்.

மனதைப் பார்த்து நிலை பெற விரும்பினால் "இங்கு வாவென வழைத்து புலர்வதன் முன் கோவிலுக்குப் போ, கூட்டு, மெழுகு. நந்தவனத்தில் பூ எடுத்துத் தொடுத்துக் கொடு தலையாரக் கும்பிடு. கூத்தாடு. சங்கரனார் போற்றி போற்றி" என்று கூறு என்கிறார்.

நாவுக்கரசு நாயனார் ஆன்மாக்கள் புறச் சமயப் படுகுழியில் வீழாது சைவமே சற்சமயம் எனத் தெரிந்து அதன் வழி நின்று சிவனை வழிபட்டு உய்யும் பொருட்டுத் தமது திருவாக்காலும் செயலாலும் மெய்யறிவு கொழுத்திய சமய குரவர் சிவனே பரம பதியெனத் துணிந்து காட்டியவர். இவர் காட்டியவாறு காவி, வீபூதி உருத்திராட்சம் ஆகிய சிவ சின்னங்கட்கு மதிப்பளிப்பதோடு அதனைப் பூண்ட அடியார்களையும் வழிபட்டு நாவுக்கரசர் தந்த தேவாரப் பதிகங்களைப் பத்தி உணர்வோடு பாடிப் பிறந்த பிறப்பின் பயனைப் பெற வேண்டும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சித்திரைச் சதய நட்சத்திரத்தில் இறைவனோடு ஐக்கியமானார். சமய குரவர்களில் நீண்ட நாள் வாழ்ந்தவர். எண்பத்தியொரு வயது. கற்பு நிலை தவறாது வாழும் பெண் தன் நாயகனைத் தெய்வமாகக் கொண்டு வாழ்வாள். அது போல் எம்பெருமானைத் தலைவனாகக் கொண்டு ஒழுக்க நெறி பேணி வாகீசரும் வாழ்ந்து பெரு நிலைப் பேறு பெற்றார். அவர் வழி நின்று நாமும் வாழப் பழகுவோம். இறைவன் நாவுக்கரசருக்கு எப்படியாக இருக்கிறார் என்பது அன்னாரின் பாடலே காட்டும்.

## திருத்தாண்டகம்

**திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலை**
**தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த சேறல்**
**குருமணியைக் குழல் மொந்தை தாளம் வீணை**
**கொக்கரியின் சற்சரியின் பாணியானை**
**யருமணியை பவளத்தை பசும் பொன் முத்தை பாவம் தீர்க்கும்**
**அருமணியை ஆரூரிரெம்மான் தன்னை அறியாது**
**அடிநாயேன் அயர்த்த வாறே.**

**பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின் 709**

அரசரின் பார்வை வேறுபாடுகளை அறியவல்ல அமைச்சரைப் பெற்றால், அவ்வரசருக்குப் பிறரோடு உள்ள பகைமையையும் நட்பையும் அவர் கண்களே தெரிவிக்கும்.

# சர்வ சமய சக்கரவர்த்தி

பண்டிதமணி கணபதிப்பிள்ளை

சைவ சித்தாந்தம் சர்வ சமய சக்கரவர்த்தி.

தம்முள் மாறுபடுகின்ற சமயங்களோடு மாறு படாதிருக்கும் சமயம் சைவ சித்தாந்த சமயம். எல்லாச் சமயமும் இருப்பது, நீதியே என்பது அதன் கொள்கை. அதே சமயத்தில் எந்த ஒரு சமயத் தோடும் சேராமலிருப்பது அதன் தனி இயல்பு.

ஆன்மா இந்த உடம்புமாய், அதே சமயத்தில் அதில் வேறுமாயிருக்கின்றது. அவ்வாறே, சைவ சித்தாந்தம் எல்லாச் சமயமுமாய் அதே சமயத்தில் வேறுமாயிருப்பது.

இறைவன், ''நிறுத்துவதோர் குணமில்லான்'' ''ஓடிமீள்கென ஆள்தல் பார்த்திருப்பவன்'' இவ்வியல்பு சைவ சித்தாந்தத்துக்கும் உரியது.

சைவ சித்தாந்தம் எந்தவொரு சமயத்தையும் தடுத்து நிறுத்துவதில்லை. மத மாற்றத்தை அது அறியாது. அதே சமயத்தில் ஓடு மட்டும் ஓடிக் களைத்து உண்மை நாடி வருபவர்களை உதறித் தள்ளாது கைகொடுத்து உதவவும் ஆயத்தமாயிருப்பது சைவ சித்தாந்தம்.

ஓர் உண்மை பல பொய்த் தோற்றங்களுக்கு இடமாயிருக்கும். கயிற்றில் பாம்பு தோன்ற லாம், கயிற்றின் உண்மை உணர்ந்தோன் பாம்பு என்கின்ற வனோடு மாறுபடுவதில்லை. மெல்ல மெல்ல அவன் கயிற்றுக்கு வர வழிசெய்து வைப்பான்.

இப்பொழுது ''கடவுளில்லை'' என்கின்ற நாஸ்திகமும், ''நான் கடவுள்'' என்கின்ற ஏகான்ம வாதமும் நமது தாய்நாட்டில் தலை நிமிர்ந்து நிற்கின்றன. உலகம் முழுவதையும் எட்டிப் பார்க்கின்றன. அவைகளையும் அணைத்து மேலும் சிந்திக்கச் செய்வது சைவ சித்தாந்தம்.

''கண்ட இவை அல்லேன் நான் காணாக் கழிபரமும் நானல்லேன்'' என்கிறது சித்தியார்.

இப்பொழுது உடம்பு மயமாயிருந்து, உடம்பை நான் என்கின்றோம். அவ்வாறே மற்றொரு சமயம் சிவமாயிருந்து, ''நான் சிவம்'' என்கின்றதொரு நிலையுமுண்டு.

பவளத்தை அடுத்த பளிங்கு பவளமாயிருந்து, நான் பவளம் என்றால் பளிங்கினியல்பை அறிந்தவர்கள் பளிங்கைப் பழிப்பதில்லை. அதற்குக் கிடைத்த அந்நிலையை ஏற்றுப் போற்றுவார்கள். ''நான் சிவம்'' என்பது பரியந்தம், வாதிப்பவர்கள் அனைவரையும் ஏற்று, அவர்களைச் சிந்திக்க வைத்து அப்பால் நடப்பது சைவ சித்தாந்தம். அதனால் அது சர்வசமயச் சக்கரவர்த்தி.

சிவஞான போதம் அறுவகைச் சமயத்துக்கும் பொதுவான சித்தாந்தம் என்றும், சிவஞான சித்தி யார் சைவத்தின் சிறப்பான சித்தாந்தம் என்றும் சமய சாதகரான தக்கார் ஒருவர் சொல்லக் கேட்டதுண்டு.

சைவம், அறுவகைச் சமயத்தில் முதற் கண்ணது. ''மெய்தரு சைவமாதி இருமூன்று'' என்கின்றது சித்தியார். இருமூன்றில் சைவம் தவிர்ந்த ஏனைய ஐந்தும் எவை என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஆராய்ச்சிக்குரியது. அவை, இவையென்று விளக்கந் தந்து விடுத்தாரில்லை.

சைவம் அறுவகைச் சமயத்தில் தலையாயதென்றும், ஏனைய ஐந்தையும் தன்பாற் கொண்டதென்றும் அறிஞர்கள் கூறுவர்.

ஆகவே, சைவ சித்தாந்தத்தை உணர்த்து வதாகிய சிவஞானசித்தியார் ஒப்புயர்வற்றதோர் அமிர்த சமய சஞ்சீவியாம்.

''மனிதப் பிறவியை எடுத்தும் சிவஞானசித்தியார் படிக்கவில்லையானால் எடுத்த பிறவி வீண் பிறவியேயாம்'' என்று முதிய படித்த பாதிரியார் ஒருவர் ஆராமை மிக்குப் பேரவையொன்றிற் பேசியதை நான் காதாரக் கேட்டதுண்டு. அந்தப் பாதிரியார் சிவஞான சித்தியார் சுபக்கத்தை வசனம் செய்திருக்கின்றார்.

தமிழிருக்கும்வரை திருவள்ளுவமும், சைவம் இருக்கும்வரை சித்தியாரும் நித்தியத்துவம் பெற்றவை.

**நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்**
**கண் அல்லது இல்லை பிற** 710

'நாம் நுட்பமான அறிவுடையோம்' என்று தம்மைக் கருதும் அமைச்சர், அரசனின் கருத்தை அளக்கும் கோலாவது, ஆராய்ந்து பார்த்தால் அவ்வரசர் கண்ணன்றி வேறில்லை.

# சந்திரசேகர மூர்த்தம்

B.S. சர்மா

சிவாலயங்களில் உள்ள சிவனுடைய பல்வேறு மூர்த்தி பேதங்களுள் மிகப் பரவலாகக் காணப்படுவதும், மிகப் பிரசித்தி பெற்றதுமான மூர்த்தம் சந்திரசேகர மூர்த்தமே எனலாம். சிவனுடைய இலிங்கோற்பவ மூர்த்தத்தின் பரமசிவ ரூபத்தில் இடம் பெறுவதும், இச் சந்திரசேகர மூர்த்தமேயாம். இதனாலேயே. சிவனது சந்திரசேகர மூர்த்தம் பொதுவாக சிவனுடைய மற்றைய மூர்த்தி பேதங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம்.

சந்திரனுக்கு அருள் புரியும் வகையில் இறைவன் பிறை சூடிய காரணத்தால், சந்திரசேகர மூர்த்தத்தை சந்திர அனுக்கிரக மூர்த்தி என்றும் கூறுவர். சிவன் சந்திரப் பிறை சூடிய சம்பவ வரலாற்றைச் சிவபுராணம் கூறுகின்றது. தக்கனுடைய 27 புதல்வியரை மணஞ் சூடிய சந்திரன் உரோகினியிடம் மட்டும் கூடுதலான பிரேமை கொண்டிருந்தான். தக்கன் தன்னுடைய புத்திரிகள் எல்லோரிடமும் வேறுபாடில்லாமல் ஒரே தன்மையதாகப் பழகும் படி சந்திரனுக்கு அறிவுரை கூறி வந்தான். எனினும், சந்திரன் உரோகினியிடத்தில் தனியன்பு செலுத்துவது வழக்கமாக இருந்தது. இதனால் தக்கன் கோபம் கொண்டான். ஆத்திரம் கொண்ட தக்கன் சந்திரனைத் தேய்ந்து, தேய்ந்து அழிந்தொழியுமாறு சாபம் இட்டான். இச் சாபத்தின் பலனாக சந்திரன் தினமும் தேய்ந்து தேய்ந்து தன் பதினைந்து கலைகளையும் இழந்தான். இறுதியில் தனது தனிக் கலையுடன் சிவனைத் தஞ்சமடைந்து பாவ விமோசனம் கொடுக்குமுகமாக சந்திரன் முழுமையாக அழிந்தொழிந்து போகாமல் மீண்டும் வளர்ந்து தேயுமாறு மாற்றித் தன் தலையில் அணிந்து கொண்டான். இறைவன் இந்த ஒற்றைக் கலைப் பிறையைச் சூடிய புராண சம்பவம் இதுவாகும். கந்தபுராணம் இதனை விரிவாக எடுத்து இயம்புகின்றது.

ஆகம சிற்ப, சித்திர சாஸ்திர நூல்களில் சந்திரசேகர மூர்த்தம் பிரதானமாக மூன்று நிலைகளில் காட்டப்பட்டுள்ளது கவனிக்கற் பாலது. சந்திரசேகர மூர்த்தம் கேவல மூர்த்தமாகவும் உபாசகித மூர்த்தமாகவும் ஆலிங்கன மூர்த்தமாகவும் சித்திரிக்கப் படுகின்றது. காமிக ஆகமங்களிலும் காரண ஆகமங்களிலும் மற்றும் சிற்ப சாஸ்திர நூல்களிலும் சந்திரசேகர மூர்த்தம் அமைய வேண்டிய விதிமுறைகள் பற்றித் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. சிவனது இம் மூர்த்தம் அருளும் தொழிலைச் செய்வதைக் குறிப்பதோடு எல்லா மங்களகரமான காரியங்களுக்கும் அடிப்படைக் காரண கர்த்தாவாக இருப்பதாகவும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

சிவனிடம் கோபமுற்ற தாருகாவனத்து முனிவர்கள் அபிசார வேள்வியை நடத்தி, பல பொருட்களை வேள்வித் தீயிலிருந்து உண்டாக்கினார்கள். சர்ப்பங்கள், மான், அபஸ்மார புருஷன் என்று அழைக்கப்படும் (முயலகன்) மழு, மாடு, புலி, சிங்கம், போன்றவற்றை ஒன்றன் பின் ஒன்றாக வேள்வித் தீயிலிருந்து உற்பத்தியாக்கிச் சிவனைத் தாக்கி, அழிவு ஏற்படுத்தும் வகையில் ஏவினார்கள். இவர்கள் இவ்வாறு தன்னை அழிக்க ஏவிய பொருட்களையெல்லாம் சிவன் ஏற்றார். மழுவையும், மானையும் தன் இரு கரங்களிலும் தாங்கி நின்றார். சர்ப்பங்களை அணிகலங் களாக்கினார். முயலகனைக் காலின் கீழ் அமிழ்த்தி, அவன் மேலமர்ந்தார். யானை, சிங்கம் முதலிய வற்றின் தோல்களை ஆடைகளாக்கினார். மண்டையோடும், பிறைச் சந்திரனும் ஆபரணங் களாகின. இந்தப் புராண வரலாற்றைச் சுப்பிரபேத ஆகமம் விரிவாக எடுத்துக்காட்டுகின்றது.

நான்கு கரங்களுடன் திகழும் கேவலமூர்த்த சந்திரசேகர மூர்த்தியின் முன் வலது கை அபய முத்திரையையும், முன் இடக்கை வரத முத்திரையையும், பின் வலக்கை மழுவையும், பின் இடக்கை மானையும், தாங்கி நிற்பன. இம் மூர்த்த நிலையில் மூர்த்தி எந்த வளைவையோ, சரிவையோ கொண்டிராமல் நேராகச் சமநிலையில் அமைந்திருக்கும். சிற்ப நூல்களின் படி இந்நிலை சமபங்கம் எனப்படும்.

தலை சடாமுடியாகவும், இச் சடையில் இளம் பிறைச் சந்திரன் அமையும். சடையில் வலது பக்கத்தில் ஊமத்தம்பூவும், நடுவில் நாக புஷ்பமும் அமைவுற வேண்டும். அழகு பொலியும் முகமும் அதில், நெற்றிக் கண்ணும் இருக்கும். கழுத்தில் கருத்தைக் கவரும் ஆபரணங்களும், இடையில் பீதாம்பரத்தைத் தரித்த நிலையில் அலையும், மான், மழு ஏந்திய கைகள் கத்தரிஹஸ்தமாக அமைவுறும். கையில் ஏந்திய மான் சிவனை நோக்கியவாறு இருக்கும். சில வேளைகளில் எதிர்ப்புறமாகத் திரும்பியும் இருக்கலாம். சடா மகுடத்தின் வலப் பக்கத்தில் இளம் பிறை அமையும். முன் வலது கை சிம்ஹ கர்ண மாகவோ, கடக ஹஸ்த்த மாகவோ, கட்ய வலம் பிதமாகவோ அமைவுறும். கர்த்தரி ஹஸ்தமாக விளங்கும் பின் இரு கைகளும் ஹிக்கா சூத்திர எல்லையை மீறக்கூடாது. மழு எப்பொழுதும் சிவனுக்கு எதிர்த்திசையில் திரும்பியவாறு அமைவுறும். இடது காதில் இரத்தின குண்டலமும், சங்க பத்திரமும் அல்லது சில வேளைகளில் பத்மபத்திரமும் காணப்படும். வலது காதில் மகர குண்டலமும் சிம்ஹ குண்டலம் அல்லது பத்திர குண்டலம் காணப்படும். சடை பின்புறம் காது மட்டம் வரை தொங்கும் அல்லது தோள்கள் வரை தாழ்ந்திருக்கலாம். கழுத்தில் இரத்தினமாலை, முத்துமாலை, பதக்க வகைகள். உபவீதம் சன்னவீரம், உத்தர பந்தலம், கேயூரம், கடகம் போன்றவை அலங்கரிக்கும். சந்திரசேகர இம்மூர்த்தம் பத்ம பீடத்தில் நிற்கும் நிலையில் அமையும்.

ஸ்ரீ சாரஸ்வதிய சித்திர கர்ம சாஸ்திரம், மானி சூத்திரம் போன்ற நூல்களும் சந்திரசேகர மூர்த்தம் அமைய வேண்டிய விதிமுறைகளைப் பற்றிய விளக்கங்களைக் கொண்டுள்ளன.

இம்முறைகளுக்கு அமையத் தனியான பத்மபீடத்திலோ அல்லது ஒரே பீடத்திலே உமையுடன் இம் மூர்த்தம் அமையும் போது இது உமா சகித மூர்த்தி எனப்படும். சுதை விக்கிரகமாகவோ, அல்லது ஓவியமாகவோ சந்திரசேகர மூர்த்தம் அமையும் போது சந்திரசேகரருக்கும் பவள நிறமும், உமைக்கு பச்சை நிறமும் அமைதல் வேண்டும்.

உமையோடு சேர்ந்த சந்திரசேகரமூர்த்தியின் இடது பக்கத்தில் அம்பிகை சற்று வளைந்த நிலையில் காணப்படும். இடது கை தொங்கும் தும்பிக்கை போன்ற அம்பிகையின் வலது கை மலரைத் தாங்கியவாறு அமைவுறும். தேவியின் உயரம் சிவனது காது மட்டம் வரையில் அமைவுறலாம்.

சந்திரசேகரர் அம்பிகையை இடது கரம் ஒன்றினால் ஆலிங்கனம் செய்யும் நிலையில் அமைவுறும் மூர்த்தம் ஆலிங்கன மூர்த்தி எனப்படும். சிலவேளை தேவியின் வலது கரம் இறைவனைத் தழுவிய நிலையில் இந்த உருவம் அமைவுறும். இவ்வாறு அமைவுறும் பொழுது சிவனுடைய இடைக்குச் சிறிது மேலே சிவனது வலப் பக்கத்தில் தேவியின் கை பொருந்துமாறு, அமைவுறும். அருமையாக சிவனதும், தேவியினதும் இடக்கரமும் வலக்கரமும் முறையே ஒருவரை ஒருவர் தழுவும் வகையிலும் அமையலாம்.

சந்திர சேகர மூர்த்தம் தனியாக அமைந்தாலும், தேவியுடன் அமைந்தாலும் சிவன் பிரபா மண்டலத்துடன் அமைவது அத்தியாவசியமாகக் கொள்ளப்படுகின்றன.

சிவனும், கௌரியும் ஒரே பத்மாசனத்தில் உள்ள இந் நிலையை பிரதோஷ மூர்த்தி எனப்பொதுவாக அழைப்பர்.

ஆகமங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் சுட்டிக் காட்டப்படும் சந்திரசேகர மூர்த்தமாகிய பிறை சூடிய எம் பெருமானை தேவாரங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. திருஞான சம்பந்தரின் முதற் பாடலிலே ''தூவெண் மதி சூடி'' எனக் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் ''போழொத்த வெண்மதியஞ்சூடி பொலிந்திலங்கும்'' என விளக்குகின்றார். சுந்தரமூர்த்தி நாயனார் **''பேழைச் சடைமுடிமேல் பிறை வைத்தானிடம்''** என்று குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில். **''பிறை குலாஞ் சடைப் பிஞ்ஞகனே''** எனவும், பிறைசேர் சடையாய் என்றும் குறிப்பிடுகின்றார்.

# சைவசமயக் கிரியைகளின் இன்றியமையாமை

க. வை. ஆத்மநாதசர்மா

அக்காலத்திலே படித்தவர் மிகச் சிலர். படியாதவர் மிகப்பலர். படித்தவர் படித்தன மிகச் சிலவேயாயினும் அவற்றைத் துறைபோகக் கற்றிருந்தனர். அதனால் தீர்க்கதரிசிகளாகப் பிறர் கொண்ட ஐயந்திரிபுகளைப் போக்கும் வன்மை படைத்தவராக விளங்கினர். ஒருசார் படித்தவர், மறுசார் படியாதவர்; படித்தவர் சொல்வதைப் படியாதவர் கேட்டு அதன்வழி வாழ்ந்தனர். இடைச் சார்பில் எவரும் இருந்திருக்கவில்லை. அதனால் யாதொரு கேடும் நேரவில்லை. இக்கருத்து.

**'கற்றில னாயினுங் கேட்க**
**அஃதொருவற் (கு)**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை**

என்ற தேவர் வாக்காலுந் துணியப்படும். காலமாற்றத்தில் கல்வி பரவத் தொடங்கியது. காலங் கருதாமல், பருவம் நோக்காமல், தரம் அறியாமல் எவரும் எந்த உணவையும் உண்ணலாமா? ஆகாதே. அது போலக் கல்வி கற்பதிலும் வரம்பு கெடலாகாது எனக் கருதிய தீர்க்க தரிசியாகிய திருவள்ளுவர்

**'கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'**

என வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த வரம்பு கடந்த நிலையிலேயே இடைச்சார் பானவர்கள் இக்காலம் மலிந்துள்ளனர். இவர்கள் கற்றவருமாகார் கல்லாதவருமாகார். துறை போகக் கற்றவர் தாமே திருத்தமுறுவர். கல்லாதவர், கற்றவர் சொற்படி நடப்பர். ஆதலின் திருத்த இடம் பெறுவர். இடைப்பட்டவர்களே இயங்கப்பட வேண்டியவராவர்.

சைவசமயச் செயல் முறைகள் யாவும் அறிவு சான்ற முன்னோர்களால் காரண காரியத் தொடர்பு கொண்டு நல்ல நோக்கத்துடன் அமைத்து வைக்கப்பட்டன வேயாம். காரண காரியத் தொடர்பை அறிந்து செய்வது நல்லதுதான். ஆயினும் அதனை அறிய முடியாத பருவத்தில் அறிய முயல்வதும் அதனை அறிய முடியாதபோது அது தவறு எனச்சாதிக்க முற்படுவதும் மௌட்டிகமாகும். உண்டால் பசி தீரும் என்பதை உணராத குழந்தை உணவை வெறுத்து நட்டமடைவது போலாகும்.

சைவசமய ஆசார அனுட்டானக் கிரியைகள், ஆன்மார்த்தம் பரார்த்தம் என இரு வகைப்படும். ஒரு குழந்தை தன்தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியாகிப் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் வரையும் உள்ள கிரியைகள் ஆன் மார்த்தம் எனப்படும். பொது வழிபாட்டுக்குரிய ஆலயம் அமைத்தல் முதல் விழா எடுத்தல் ஈறான கிரியைகள் பரார்த்தம் எனப்படும். வேதம் ஆகமம் என்பவற்றில் இவற்றை அனுட்டிக்க வேண்டிய விதி முறைகள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. விஞ்ஞான அறிவு விரிந்துள்ள இந்தக் காலத்திலும் இந்தக் கிரியா முறைகள் இப்படித்தான் அனுட்டிக்கப்பட வேண்டுமா என்ற வினா விந்தையானது.

மனித வாழ்வின் வசதிக்காகவே சட்டப் பிரமாணங்கள் மனிதரால் ஆக்கப்பட்டவை. ஒரு நீதிமன்றத்திலே இன்ன முறைப்படி மக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்ற விதி இருக்கிறது. இந்தக் காலத்திலும் இப்படித்தான் விதிக்கு அடங்கி நடக்க வேண்டுமா என்று கேட்பது போலத் தான் இருக்கிறது முந்திய வினா. சில்வாழ் நாட் பல்பிணிச் சிற்றறி வினராகிய மனிதரால் ஆக்கப்பட்ட உலக வாழ்வுச் சட்டப் பிரமாணங்களை மனிதராகிய நாம் மதித்து நீதிமன்றத்தில் அடங்கி வாழக் கடமைப்பட்டுள்ளோம். ஒரு குறைவுமில்லாது நிறைவுத் தன்மைபூண்ட இறைவனாலும், இறைவனது அருள் வழிபட்ட முனிவர்களாலும், இருமை வாழ்வுக்கும் ஏற்றனவாக அமைக்கப் பெற்ற வேதாகம சாஸ்திரிப் பிரமாணங்களைப் பின்பற்றி ஒழுகும் விஷயத்திற்றான் எமக்கு இப்படியாக சைவ சமயிகளிடத்தே இந்த விபரீத புத்தி பெறாமல் அவர்கள் கிரியாமுறைகளைத் தொன்மை மறவாது இக்காலத்திலும் முக்கிய மானதாக அனுட்டித்து ஈடேறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் சுரப்பாராக.

# கலை வாய்மைக் காவலனால் காதலித்த கயிலைக் காட்சி

சிவ: சண்முகவடிவேல்

திருநாவுக்கரசு நாயனாரைக் கலைவாய்மைக் காவலனார் என்று பெரிய புராணம் எடுத்து மொழியும். நாயனார் தமது வழிநடை வழிபாட்டில் காளத்தி தரிசனம் கயிலைக் காட்சி கண்டு தொழுவதற்கு ஒரு தூண்டு கோலாக அமைந்தது. நாயனார் திருக்காளத்தித் தலத்தை வந்தடைந்தார். ஆங்கு தங்கி இருக்கும் நாளில் மிகவுயர்ந்த காளத்தி மலையில் திருப்பணிகளைச் செய்து மகிழ் வுற்றார். காளத்திக் கடவுளைக் கைதொழுது களிப்புற்றார். திருத்தாண்டகம் முதலான திருப்பதிகங்களை உருக்கத்துடன் தமிழோடிசை மறவாமல் பாடியருளினார். தென் கயிலாயத்தில் தானுவின்தாள் தொழுத குறிப்பினால் வட கயிலாயத்தில் கடவுளைக் கண்டு தொழக் காதல் கொண்டார் கலை வாய்மைக் காவலனார்.

நாயனார், காளத்திக் கண்ணுதலாருடைய கருணை பொழிந்த திருவருள் விடை பெற்றார் வட திசையை நோக்கி விருப்பினோடும் வழிநடையை வழிக்கொள்வார். நாயனார் பெரு மலைகளையும் காட்டாறுகளையும் நாட்டார் நற் பதிகளையும் காடுகளையும் கடந்து நடந்து படர்ந்தார். செல்லும் வழியில் சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பருப்பதம் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தார்.

வித்தியாதரர்கள் அருள்வளம் மிக்க திருப்பருப்பத்தை நாளும் நாடி வந்து வணங்குவார்கள். அதே போல விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் பருப்பதத்தைப் பரவிப் பணிய பரிந்து வருதல் ஒழியார்கள். ஆகாயத்தில் இயங்குகின்ற இயக்கர்களும் மயக்கம் அகல வழிபட மறவார்கள். சித்தர்களும் உள்ளச் சுத்தியோடும் பத்தி பண்ண வருவார்கள். கானத்தில் வல்ல கின்னரர்கள் கிளர்ந்து பறந்து வருவார்கள். பருப்பதத்தைப் பணிய நாக உலகத்தவர்களும் நலம்பல பெறப் பருப்பதத்திற்கு வருவார்கள். சிவானந்தத்தில் சிறந்த மோனிகள் பருப்பத தானத்தை வணங்கத்தவிரார். தம் இட்டம் போல நடமாடுகின்ற தேவ சாதியர்கள் பருப்பதப் பிரானை வணங்கித் தம்குறை தீர்ப்பார். திருநாவுக்கரசு நாயனார் பருப்பதத்தில் பரம்பொருளைப் பணிந்தார். பழுத்த பண்ணில் வளத்தமிழ் எடுத்துப் பருப்பத நாதர் பாதங்களை வாழ்த்திப் பாடினார்.

ஆளுடைய அரசு ஆங்கிருந்தும் அருள்விடை பெற்று அகன்று ஏகினார். சூலப் படையைத் தாங்கி, ஆத்தி மாலை அணிந்து வெள்ளி வெற்பின் மீது வீற்றிருந்து அருளும் விண்ணாபதிபரை நண்ண உண்ணிறைந்த விருப்பினை உடையவரானார். நாயனார் நடந்தருளும் இரு மருங்கிலும் அவர் ஆர்வம் அறிந்து அடியவர்கள் வந்து குழுமினார்கள். நாயனார் தெலுங்கு தேசத்தை நீங்கிச் சென்றார். கருநட நாட்டில் கடுகிச் சென்றார். தொடர்ந்து அப்பால் ஆர்வத்தோடு செல்லும் அரசு, நாடு, காடு, காட்டாறு, சேயுயர் மலை ஆகியவற்றைக் கடந்து நடந்து சென்றார். செல்லும் வழியில் சோலைகள் சூழ்ந்த மாளவ தேசத்தை அண்மினார்.

நாயனார் மாளவ தேசத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் அருஞ் சுரங்கள் பலவற்றை அகல்வார். இலாட பூமியைச் சென்று எய்தினார். இலாட பூமியில் எம் மருங்கு திரும்பினாலும் கவின் விளங்கும் தரும நிலையங்கள் கருத்திற்கு விருந்தாக விளங்கின.

அவற்றை எல்லாம் கண்டு களிப்புற்று மண்டு காதலில் செல்லும் காவலனார் பைதிர தேசப் படிமிசை படர்ந்தார். செல்வழி எங்கும் மேகங்கள் தவழும் உயர்ந்த மலைகளும் மரங்கள் அடர்ந்த வனங்களும் நதிகளும் மனத்தை மகிழ்வித்தன. தாமரை மலர் நிறைந்த வயல்கள் பச்சைப் பசேலெனப் பொலிவுற்றன.

நாயனார் அந்தநாடு அகன்ற பின்பு கங்கை நதி வலம் வரும் வாரணாசியை வந்தடைந்தார், காசியம்பதியில் தெண்ணிலா மலர்ந்த வேணியாரை உண்ணிகழும் உவகையோடு மண்ணில் வீழ்ந்து வணங்கினார். வாரணாசியில் நாயனார் தம்மைப் பின்தொடர்ந்து வந்த அடியார் திருக்கூட்டத்தினரை அங்கு தங்க வைத்தார். தாம் தனி ஒருவராக வாரணாசியி னின்றும் வழிக்கொண்டார்.

நாயனார், அருந்துணையை அல்லல் அறுக்கும் அருமருந்தை அகத்துட் கொண்டார், அடர்ந்த காடும் படர்ந்த மலையும் மலிந்த கற்சுரவழியே தமது வழிநடையை தொடர்ந்து மேற் கொண்டார்.

கலை வாய்மைக் காவலனார் மேற்கொண்ட கற்சுரம் ஆகாயத்தை அளாவிய பெருங் காடு. எப்பக்கம் திரும்பினாலும் மானுட மூச்சுத் தோயாத இடமாகக் காணப்பட்டது. கலைவாய்மைக் காவலனாருக்குக் கயிலைக் காட்சி காணும் காதல் நெஞ்சில் கனிந்தது. இதுவரையில் உணவாக உட்கொண்ட இலை, சருகு, கிழங்கு, கனி என்பவற்றையும் உண்ணாது ஒழிந்தார். ஓய்வு உறக்கம் நீத்தார். ஒப்பற்ற ஒளி மயமான கயிலைக் காட்சியைக் கண் குளிரக் காண வேண்டும் என்னும் அவா ஒன்றி னையே குறிக்கோளாகக் கொண்டார். இராக் காலத்திலும் அயராது விரையோடு ஏகினார்.

இரவிலும் இருளிலும் இறைவனுடைய திருமலையை நினைந்து நடக்கும் திருநாவுக்கரசு நாயனாரை கொடிய விலங்கு களும் அயலில் வந்து கொடுந்தொழில் புரிய அஞ்சின. நஞ்சினை உமிழும் நாகங்கள் அஞ்சியதோடு துஞ்சாமல் இரத்தின மணி விளக்குகளை எடுத்து எங்கும் ஒளி பெருகச் செய்தன. தேவர்களானாலும் செல்லுவதற்கு அரிய சுரவழி நடந்தார் திருநாவுக்கரசு நாயனார்.

அத்தன்மையைப் பெரிய புராணம் எடுத்து இயம்பும் தன்மை இது காணீர்.

**ஆய வாரிரு ளின்க ணேகுமவ்**
**வன்பர் தம்மை அணைந்துமுன்**
**றீய வாய விலங்கு வன்றொழில்**
**செய்ய வஞ்சின நஞ்சுகால்**
**வாய நாக மணிப்ப ணங்கொள்**
**விளக்கெ டுத்தன வந்துகால்**
**தோய வானவ ராயி னுந்தனி**
**துன்ன ருஞ்சுர முன்னினார்.**

(1620)

நாயனார் கயிலை செல்லுங் காட்டினிடமாக நண்பகலில் சூரியக் கதிர்களின் அலைவீச்சு பக்கம் எங்கும் பராவின. அங்கு காணப்படும் அளவில்லாத நிலப்பிளப்புக்களின் வழியே சென்று நாகவுலகத்திலும் சூரியனுடைய வெவ்விய கிரணங்கள் எரிகின்றன.

பொங்கி எழும் தீ வெப்பத்தினால் அழிவு செய்யும் பாலை நிலத்தின் சுடுநிழல் புகுந்த இடத்தில் புகும் சூரிய கிரண வெப்ப அலை வீச்சிற்கு ஒப்பாக உள்ளது. அந்தத் திசையில் திண்ணிய மெய்த்தவ நாயனார் நண்ணினார்.

இரவும் பகலுமாகக் கடத்தற்கரிய கற்சுரத்தில் நாயனார் நடக்கின்றார். நடக்க நடக்கத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பாதங்கள் பரடு என்னும் பாகம் வரை தேய்வுற்றன. தேய்வுற்றும் உமையொரு பாகருடைய கயிலையங்கிரியை மறப்பார்

அல்லர் மாண்புடைய தொண்டர். கால்கள் இரண்டும் கற்சுரத்தில் தேய்ந்ததால் நாயனார் கைகள் இரண்டினாலும் தாவிச் செல்வா ராயினார்.

கைகளும் மணிக்கட்டு வரை தேய்ந்து சிதைந்தன. உண்மையுடன் கலந்து எழுந்த மனத்தில் அன்பு என்னும் ஆர்வம் மேன் மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. கொடிய தீப் போன்ற பரற் கற்களில் நின்றும் புகை எழுகின்றது. சிவபெருமானுடைய மெய் அன்பராகிய திருநாவுக்கரசு நாயனார் வழிச் செல்ல வழிகண்டார். வருந்தி வருந்தி மார்பினால் உந்தி உந்திச் செல்வராயினார்.

உந்திச் செல்லும் முயற்சியினால் மார்புத் தசைகள் சோர்ந்தன. தேய்ந்து சிதைந்தன. ஒன்றோடொன்று வரிந்து கட்டப்பட்ட மார்பு எலும்புகள் முரிந்தன. என்பு முரிந்தாலும் நாயனாருடைய திருவுள்ளத்தில் கயிலைப் பெருமானுடைய காட்சியைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்னும் பேரன்பு அகலாத குறிக்கோளாக நிலைத்து நின்றது. உயிரால் உந்துகின்ற உடம்பு எங்கும் உள்ள தசைகள் மெலிந்தன. நலிந்து சிதைவுபட்டன. சதைகள் சிதைவுபட, திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனார் அக் காட்டுக் கற்சுரத்தில் புரண்டு புரண்டு உருண்டு சென்றார். புரண்டு செல்லுகின்ற நீண்ட வழியில் உடல் முழுவதும் தேய்ந்தது. தேயாத உள்ளம் அடைதற்கரிய திருக்கயிலையினை சென்று சேர்வுற்றது. நாயனாருடைய திருமேனியிலுள்ள புற அவயவங்கள் அழிந்தன. பின்னர் நாயனார் மெல்ல உந்திச் செல்லும் ஊக்கமும் தடை பட்டது. நாயனார் பிறிதொரு செய்கையும் அற்றவரானார்.

நற்றமிழ் வல்ல நாவுக்கரசர் காட்டு வழியில் நாட்டார் யாரும் கேட்பாரின்றிக் கிடந்தார்.

அந்நிலைமையரான அன்பருக்கு அந்த வேளையிலும் சிவபெருமான் கயிலைக் காட்சி காணக் கருணை காட்டவில்லை. நாயனார் அழிவற்ற இனிய செந்தமிழ் பாக்களால் உலகத்தில் தம்மை மேன் மேலும் புகழ்ந்து பாடத் திருவுள்ளம் சிறந்தார்.

நிர்மலர் நல்ல நீர் நிறைந்த ஒரு தடாகத்தையும் உடனாகக் கொண்டு அவ்விடம் வந்தார். நாகாபரணம் புனைந்த பொன் போலும் திருமேனியார் ஒரு முனிபுங்கவராக நடந்து வந்தருளினார்.

வந்த சிவபெருமான் வாகீசருக்கு அருகில் சென்று அணைந்தார். எம்பெருமான் எதிராக நின்றருளினார். நம்பிரான் நாயனாரை நாடிப் பார்த்தார். நாயனாரும் முன்னே நிற்கும் முனிவரை நாடிப் பார்த்தார். நாயனாரும் முன்னே நிற்கும் முனிவரை நோக்கினார். பின்னர் கயிலை நாதர் திருத்தொண்டரிடத்தில் பின்வருமாறு திருவாய் மலர்ந்து அருளுகின்றார்.

''அன்பனே! உனது உடல் உறுப்புக்கள் அனைத்தும் சிதைவுற்று அழிந்து போயின. அருந்துவதின்றி வருந்தும் முயற்சியினால் அருந்துயர் உழந்து உற்றுள்ளாய். இந்தக் கொடிய பாலைநிலத்தில் என்ன கருதி ஏகினீர்?'' என்று வினாவி அருளினார்.

திருநாவுக்கரசு நாயனார் சற்று நேரம் முனிவரை உற்றுப் பார்த்தார். முனிவர் அழுக்கில்லாத மரவுரி ஆடை அணிந்திருந்தார். மார்பினிடமாக முப்புரிநூல் அசைந்து கிடந்தது. ஒளி மிக்க சடாமுடி கண்களைக் கவர்ந்தன. திருமேனி எங்கும் திருநீற்றொளி பிரகாசித்தது. குற்றமற்ற முனிவராக முன்னே நின்ற கயிலை நாதரைக் கண்ணுற்றார் கலைவாய்மைக் காவலனார். பெரியவராகிய திருநாவுக்கரசு நாயனாருக்கு முனிவருடன் பேசுவதற்குப் பொருந்திய ஓர் உணர்வு உள்ளத்தே உதயமானது, பின்வருமாறு உரைக்கத் தொடங்கினார்.

(மிகுதி அடுத்த இதழில் ......)

# திருவாசகத்தில் ஒருவாசகம்

பேரறிஞர் முருகவேபரமநாதன்

ஈழ மண்டலத்தில் வதிந்த, தென்தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழர்கள் போற்றும், சமயங்கள் சைவமும், வைணவமுமாம். சிவத்தோடு சம்பந்தமானது சைவம். விஷ்ணுவை முழுமுதற் கடவுளாய் வழிபடுவோர் வைணவர். பிற்கால மேற்கத்தைய படையெடுப்பால் கிறிஸ்தவம் ஊடுருவியது. பலர் மதம் மாறினர். வைணவ கிருஷ்ண பிள்ளை மாறி இரட்சண்ய யாத்திரிகம் பாடினார். ஈழத்து ஞானப்பிரகாசர் சைவ நெறியினின்று கத்தோலிக்கம் புகுந்தார். இன்னும் உலகமயமாக்கும் நோக்கில் கிறிஸ்தவம் சைவ மதத்தினரை மதமாற்றம் செய்து கொண்டே இருக்கக் காணலாம். ஒரு நாவலரின் அவதாரம் சைவத்தைப் பேணிக் காக்க வழிசமைத்தது. இம்மிலேனியத்தில் நம்மவர் பலர் மதமாற்றம் செய்யப் பெற்றனர். நம்மண்ணிலும் நம்மவர் புலம் பெயர்ந்து வாழும் சீமைகளிலும் அசல் சைவர்கள் மதம் மாறிவிட்டனர். இந்து மதபீடக்காரர் தம் சிகரங்களிலே கிறிஸ்தவ கொண்டாட்டங்களை மடி நிறைப்பான் வேண்டி மேற்கொள்வர். பல விப்ரர் கிறிஸ்த்தவ மாதர்களை விவாகம் செய்தமை யதார்த்தம். ஆக இந்த ஊடுருவல் நம்மை நலின, மெலினப்படுத்திவிட்டது. இப்படியொரு இயக்கம் தமிழகத்தில் சற்றேறக்குறைய நூற்றாண்டு ஏழு, எட்டில் ஏற்பட்டது. சிறப்பாக, பௌத்தம், சமணம் இரண்டும் சைவ வைணவ காழ்ப்பை ஏற்படுத்தின. இவற்றினின்று மீட்டெடுக்க ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி அணை போட்டனர். அவர்களின் அருளிச் செயல்களிலெல்லாம் பெத்ததம், சமணம் பற்றிய பதிவுகளைக் காணலாம். சைவ சாத்திரங்கள் தோத்திரங்கள் தோன்றியமை போல ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களும் நிகமாந்த தேசிகர், இராமானுஷர் கொள்கைகளும் எழுந்தன. சைவமும், வைணவமும் மீளவும் நிலை நிறுத்தப்பட்டது.

இவ்வரலாற்றுத் தடத்தில் வழிபடு நிலையங்கள். சமயக்கல்வி, ஒழுகலாறுகள் விரிந்தன. இறைவனின் திருமேனிகள் தேவாரம் என்றழைக்கப்பட்டது. எம்பெருமானின் புகழ் பேசும் இசைப் பாடல்கள் தேவாரம் என்று வழங்கலாயிற்று. திருநாவுக்கரசரின் இனிய பாடல்களைத் தேவாரம் என்றனர். திருஞான சம்பந்தர் செய்த பக்திப் பாசுரங்கள் திருக்கடைக் காப்பு என்றழைக்கப்பட்டது. நம்பியாரூரரின் சுந்தரத் தமிழ் திருப்பாட்டு எனப் பெயர்பெற்றது. காலவோட்டத்தில் மூவர் தமிழும் தேவாரம் என்றே வழங்கப்பட்டது. தெய்வம் சுட்டிய வாரப் பாடல் தேவாரம் எனப் பெயர் பெற்றது. வாரம் - அன்பு, பசை, ஈரம். இவ்வண்ணமே தேவ பாணியென்றோர் வழக்காறு தமிழில் உண்டு. தேவரைமுன்னிலைப்படுத்திப் பரவும் பாடல்கள் தேவபாணியெனப்பெயர் பெற்றது. பதினோராந் திருமுறையில் இவ்வழக்காறு இடம் பெற்றுள்ளது.

சைவமும் வைணவமும். ஏன் கிறீத்தவமும் திரு என்ற சொல்லை பயன்படுத்துகின்றன. திரு பல பொருளில் அமையினும் தாம் வழிபடு தெய்வத்தையும் திருவெனப் பாடியுள்ளனர். வைணவ சைவ வழக்காற்றில் இத்திரு பயன்படும் இரு தோத்திரங்களை மேலே தருதும்.

**திருவுடை மன்னரைக் காணில்**
**திருமாலைக் கண்டேன் என்னும்**
**உருவுடை வண்ணங்கள் காணில்**
**உலகளந்தான் என்று துள்ளும்**
**கருவுடைத் தேவில்க ளெல்லாம்**
**கடல் வண்ணன் கோயிலே என்னும்**
**வெருவிலும் வீழ்விலும் ஓவாக்**
**கண்ணன் கழல்கள் விரும்பும்**

தேவு + இல் : தேவில் கோயில்
திருவாய்மொழி 4 : 4 . 8

தலைவனின் பிரிவை ஆற்றாது போலிப் பொருள்களைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் கூறல் கண்ணன் கழல்களை விரும்புகிறாள் என் மகள் எனத்தாய் கூறும் பாசுரம் இது.

**திருவேயென் செல்வமே தேனே வானோர்**
**செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க**
**உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்**
**உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற**

**கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்**
**கருமணியே மணியாடு பாவாய் காவாய்**
**அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்**
**ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.**

திருமுறை :47.1

திரு: திருமகள் , செல்வம், அழகு, உயர்வு, தெய்வம், தெய்வத்தன்மை, சிவலோகம் என்றெல்லாம் பொருள் பரும திருவுடை மன்னர் எல்லா வளமும் நிறைந்த அரசர் திருமால் விஷ்ணு தெய்வம், இரண்டாவது பாடலில் வரும் திரு: சிவன் கடவுள் இத்திருவோடு இயைந்த பல பக்திப் பனுவல்கள் தமிழ் மொழியிலேயே நிறைய உண்டு. தமிழொடு அருள் மொழி. பக்தியை வெளிப்படுத்தும் பக்தி மொழி. தமிழ் செய்தல் (திருமந்திரம்) அன்பு செய்தல் என்றும் பொருள் பன்னிரு திருமுறைகள் சைவ சமயத் தொகுப்பு. இஃது தோத்திரமயமானது. இதை வேதாசாரம் என்பர். இதே பாணியில் உருவான திருநாலாயிரம் எனும் திவ்வியப் பிரபந்தம் பன்னிரு ஆழ்வார்களின் அருளிப்பாடுகள். இவையும் திருமால் தோத்திரங்களே இதைத் திராவிட வேதம் என்பர். திருமுறைகளைத் தமிழ் வேதம் என்பர்.

பன்னிரு திருமுறைகளில் மிக்க மதிப்புடையது திருவாசகம். திருவாசகமும் திருக்கோவையாரும் திருவாதவூரர் தந்தவை. திருவாசகம் சிகாமந்திரம் போன்றது. திருநாலாயிரத்தில் நம் மாழ்வார் செய்தது திருவாய் மொழி, வாய் மொழி, வாசகம் இரண்டும் ஒத்த பொருளின. திருநாலாயிரம் ஆயிரத்துக்குச் சற்று அதிகமானது. திருவாசகம் திருக்கோவையார் இரண்டும் 656+500= 1156 பாட்டுக்கள். திருமாலைப் பாடினார். நம்மாழ்வார் (சடகோபர்) சிவனையே பாடியவர் திருவாதவூரர் (மாணிக்கவாசகர்) திருமால் சடகோபரைத் தன்னாக்கிப் பாடவைத்தார். சிவனோ தன்னடிகளைப் பாடப் பண்ணி எழுதியும் வைத்தார். திருவாசகம் ஒன்றே தெய்வம், ஒன்றே குலம். எனப் பேசும் திருவாசகம் தித்திக்கும் தேன் என்றனர். பிறரைத் தொழாதவர் வைணவர். சிவனையன்றி வேறொருவரையும் பாடாத கற்பு நெறி நின்றவர் வாதபுரீசர். பிற மதத்தை, பரசமயத்தை ஏற்காதவர். ஆகத் திருவாசகக் கோட்பாடு , கொள்கை, கருது கோள் என்ன? அதிலே இறைந்து கிடப்பது ஒன்றேயொன்று பிற தெய்வம் பேணாப் பெட்டி, நேர்மை, நீதி, இறைவனை நீதியாய்க்கண்டு பேசிய கண்ணோட்டம். நம்மாழ்வார் தன்பாசுரங்களை வாசகம் என்று அறிமுகம் செய்கிறார்.

**நெஞ்சமே! நீள் நகராக இருந்த என்**
**தஞ்சனே, தண்ணிலங் கைக்கிறை யைச்செற்ற**
**நஞ்சனே, ஞாலங்கொள் வான் குறளாகிய**
**வஞ்சனே, என்னுமெப் போதுமென் வாசகமே**
**நகர். ஆலயம்**

திருவாய்மொழி 3 : 8.2

**வாசகமே ஏத்த அருள் செய்யும் வானவர்தம்**
**நாயகனே, நாளிளந் திங்களைக் கோள்விடுத்து**
**வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆனாயர்**
**தாயவனே, என்று தடவுமென் நெஞ்சமே.**

மேலது 3 : 8.3

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த திருப் பெருந்துறை மேயபிரானைப் பாடிய பைந்தமிழ்ப் பாமாலையான் திருவாசகம். திருவைப் பாடிய வண்ணங்களே அவர் எண்ணங்கள் ‘அவை நம்மை வழி நடத்தும். வழிபட வழிபட தெய்வீகம் சித்திக்கும். திருநின்ற செம்மை வாய்க்கும். மறந்தும் புறந்தொழாமல் வாழவழி சமைக்கும்.

**கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வுகுடி**
**கெடினும்**
**நள்ளேன் நினதடி யாரொடல்லால் நரகம் புகினும்**
**எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா**
**உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லா**
**தெங்கள் உத்தமனே**

கொள்ளேன் - ஏற்றுக் கொள்ள மாட்டேன் - புரந்தரன் - இந்திரன் - திருச்சதகம் -2
அயன் - நான்முகன், நள்ளேன் - நட்புப்பாராட்ட மாட்டேன்
எள்ளேன்-ஏளனஞ் செய்யமாட்டேன், உள்ளேன் நினைக்க மாட்டேன்.

**பழுதில் தொல் புகழாள் பங்கநீ அல்லால்**
**பற்றுநான் மற்றிலேன் கண்டாய்**
**செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்**
**துணையென நினைவனோ சொல்லாய்**
**மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்**
**வருக என்றருள் புரியாயே**

அருட்பத்து 10

பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்றுமி லாதவரைக்
கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற் கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி
யா தென்றன் உள்ளமதே

திருப்பாண்டிப்பதிகம் 1

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உல கெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே

அருட்பத்து 2

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம்
மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல்
பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென
நினைந் தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சுமாறே

அச்சப்பத்து 1

பச்சைத்தாள் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தா பெருமானே அடியேனை உய்யக் கொண்டு
எச்சத்தார் சிறு தெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவாறு அன்றே உன் திறம் நினைந்தே

திருவேசறவு 4

தேடும் பொருளும் சிவன்கழலே எனத் தெளிந்து

குலாப்பத்து 1

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஊடுவ துன்னோடுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக் கெனக்குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

வாழாப்பத்து 3

சிவனையன்றி வேறு தெய்வம் பாடாத திருவாசகம் நம் புனித நூலாகும். இன்று பிற தெய்வ வணக்கம் வாழைப் பழத்தில் ஊசி ஏறியது போல் விப்ரர்களால் அறிமுகப் படுத்தப் படுகின்றமை மறைக்கமுடியா உண்மை. இதற்கு ததாஸ் சொல்லும் சைவசமயிகள் கொஞ்சம் நிதானித்து நம் எதிர்காலச் சந்ததியை வழிப் படுத்த வேண்டும். காலத்துக் கேற்ற சிந்தனை யாளர்கள் நமக்கு இன்று தேவை. ஆகத் திருவாசகந்தோறும் உள்ள சிவ வணக்கத்தை முற்றோதுவார் உணர்ந்து விழிப்புணர்வோடு நடப்பார்களாக. திருவாசகத்தில் ஒருவாசகம் பிறந்தொழாமை. சிவம் தொழுதல் என்பதை ஆழப் பதிப் போமாக - திருவாசகம் சொல்வது போல் நாம் வாழ முயல்வோம். திருச்சதகத்தில் அமைந்த ஓர் வாசகத்திற்கு மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் தந்த உரையை மேலே தருகிறோம். பயன் பெறுவீர்களாக.

முடித்த வாறும் என்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே
சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறுமிவை யுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே

திருச்சதகம் 57

அடியேனுக்கு இவ்வூனுடலைக்காத்து இங்கு இருக்கும் படி முடிவு செய்ததும் பொருத்தமே. முன்னர் மெய்யடியார்களைத் தளரவிடாமல் அணைத்துக் கொண்டதும் பொருத்தமே. கள்வனாகியயான் இவ்விடத்து, மயக்குந் தொழில்சேர் ஒரு பெண்ணின் இதழின் துடிப்பையும், துகிலின் சிறு நெகிழ்ச்சியையும், நெற்றியில் சிறு வேர்வையையும் காணும்படி நேர்ந்தது. இக்காட்சியால் கேடுவரும் என்று உணர்ந்திருந்தும் கண்டமையால் எனக்கு யானே கேடு தேடிக் கொள்ளல் ஆனேன். இத்தகைய நிகழ்ச்சிக் குறிப்புகள் உலகுய்தற் பொருட்டு உரைக்கும் ஏற்றுரை என்ப ஏலா உலகியல்பை ஏற்றித்தம் மேற் கூறுதல்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி.

# மாணிக்கவாசக சுவாமிகள்

ஆ. குணநாயகம்

சைவ சமய குரவர் நால்வருள்ளும் காலத்தாற் பிந்தியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இக்காரணத்தால் அவர் நாலாவதாக வைத்து எண்ணப் படுகின்றார். முந்திய மூவர் முதலிகள் அருளிய அருட்பாடல்கள் தேவாரம் என்னும் பெயருடையன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை திருவாசகமும், திருக்கோவையாரும். திருவாசகம் என்னும் திவ்விய நூல் கருங்கல் மனத்தையும் உருக்கக் கூடியது. மேல் நாட்டுக் கிறிஸ்தவப் பாதிரியாரான G.U.Pope என்பவர் திருவாசகத்தின் பால் ஈடுபட்டிருந்தார். Oxford பல்கலைக்கழக முதல்வராகிய அவரது நண்பர் Benjamin Jowelt என்பவருடன் ஒருநாள் வெளியிலே உலாவிக் கொண்டிருந்தபோது திருவாசகத்தைப் பற்றிய பேச்சு நிகழ்ந்தது. "அது அவ்வளவு சிறந்த நூலாயின், ஏன் அதனை ஆங்கில ஆக்கம் செய்யக் கூடாது.?" என Jowelt கேட்டார். "நண்பரே, எனக்கு வயதாகிவிட்டது. இப்பணி நீண்டகாலம் எடுக்கும். மரணத்திற்கு நான் விதி விலக்கான வனல்லனே. என்று விடை பகர்ந்தார் பாதிரியார். "உயரிய ஓர் பணியை மேற் கொண்டு, அதனை முன்கொண்டு செல்வதே ஆயுள் நீடிப்பிற்கு உபாயம். இப்பணி நிறைவுறும் வரையும் நீர் உயிரோடிருப்பீர்", என்று உறுதி கூறினார் Jowelt இவரது யோசனைபபடி இப்பணியை மேற்கொண்ட பெரியார் Pope தனது 80 ஆவது வயதிலே அதனைப் பூர்த்தி செய்ததாக முன்னுரையில் எழுதியுள்ளார்.

முன்னாள் இந்திய நீதியரசர் ஒருவருடன் இப்பெரியார் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். அவருக்கு இவர் திருவாசகம் தொடர்பாக எழுதிய ஒரு கடிதத்தில் சில நீர்த்துளி அடை யாளங்கள் காணப்பட்டன. அவற்றை அப்பெரியார் வட்டமிட்டுத் தனது கண்ணிலிருந்து தெரிந்த கண்ணீர்த் துளிகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு, ஒரு மேல் நாட்டு அறிஞர், அதுவும் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார், மேன்மையாகப் போற்றிய திருவாசக நூல் எமது சைவ அன்பர்கள் எத்தனை பேர் வீட்டில் உள்ளனவோ நாம் அறியோம். மாணிக்கவாசக சுவாமிகள் கூறியிருப்பதுபோல, அத் தேவர் தேவர், அவர் தேவர் என்றிங்கன் பொய்த்தேவு பேசும் பூதலமாக" ஓரளவு மாறிவருகின்றது எமது சைவ உலகம் ஏனைய சமயத்தவர்கள் தமது சமய நூல்களை எவ்வாறு போற்றுகின்றார் என்பதைப் பார்த்தாவது நாம் திருந்த வேண்டாமா? ஆறுமுக நாவலர் ஐயா போன்ற சைவப் பெருமக்கள் இல்லாத குறை தோன்றுகின்றது. "மாணிக்கவாசக சுவாமிகள் அறிவாற் சிவனே என்பது திண்ணம்" என்று அப்பெருமானே போற்றினார்.

உலகச் சமய நூல்களுள் இது ஒரு தனிப் பெருமை வாய்ந்தது என்று கூறிவிடலாம். அன்பு நெறியில் நின்று, படிப்படியாக ஆண்டவனை அடையக் கூடிய வழியை இந்நூல் காட்டிநிற்கின்றது. இந்நூலின் முதற்கண்வரும் நான்கு அகவற் பாக்களும், நூலுக்கு முகவுரை போலப் பெருமானது பெருமையைப் பேசுகின்றன. பின்னர் இந்நூல், பாசநீக்கம், ஞானோதயம், இருமை நீங்கிய ஒருமை நிலை என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிவதை நாம் ஊகித்து அறியலாம்.

பாச நீக்கம் என்பது தன் மீதுள்ள உலகப்பற்று முதலான குற்றம் குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கி, ஆன்மீகத்திற்குரிய தகுதிப்பாட்டை உண்டாக்கிக் கொள்ளுதல். இதனை நாம் திருச்சதகத்திலும், நீத்தல் விண்ணப்பத்திலும் பிற இடங்களிலும் காணலாம்.

**'ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன்,**
**அன்புருகேன்,**

பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன்..
சாமாறே விரைகின்றேன்', என்றும்,

'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து, நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்',
என்றும்.

'ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்.
பாழுக்கிறைத்தேன், பரம்பரனைப் பணியாதே,
என்றும் பலவாறாகக் கதறி விட்டு
வெள்ளத்துள் நாவற்றியாங்கு,

உன் அருள் பெற்றுத் துன்பத்தின் நின்றும், விள்ளக்கிலேனை, விடுதியோ என்று இரங்கிக் கேட்டு, மேலும்பரிந்து கேட்கின்றார்.

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக் கூத்தா.

மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்துவேனை வாவென்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனாற் சிரியாரோ'

இந்நிலையில், முற்றாகச் சரணாகதியடைவதே வழியென உணர்கின்றார், பாடுகின்றார்.

'உன்னை வந்திப்பதோர் நெறியறியேன், நின்னையே அறியேன்,
நின்னையே அறியும் அறிவறியேன், உடையாய் அடியேன் உன் அடைக்கலமே'

திருவெம்பாவை தொடக்கமாக வரும்பாடல்களில் சிறிது ஞானோதயத் தெளிவு ஏற்படுகின்றது. இங்கு, நாயக நாயகி பாவத்திலே இறைவனைத் தலைவனாகக் கொள்ளும் ஒரு தலைவியின் தன்மையை அடைகின்றார் சுவாமிகள். சிவபெருமானைத் தலைவனாகக் கருதிய ஒருசிறு பெண் தனது தாயை நோக்கி அவர் பெருமையைக் கூறுகின்றாள்.

'வேத மொழியர் வெண் நீற்றர் செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும்'.

தனது கதறுதல்களைக் கேட்டுப் பெருமான் தனக்கு அருள் புரிந்த விதங்களைப் பலபடச் சுவாமிகள் கூறிக் குதூகலிக்கின்றார்கள்.

'நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும் தையலும் தாழ் சடையோன்', என்றும்

'பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள் தோறும்.
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா, என் ஆருயிரே, அம்பலவா .........'
என்றும்.

'பன்னாட் பரவிப் பணி செய்யப் பாதமலர்
என் ஆகம துன்ன வைத்த பெரியோன்' என்றும்,

'பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக் கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதை குணம் ஆகாதே,
காத்தாய்'.................... என்றும்,

'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன்.........' என்றும்,

'மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியாரிற் கூட்டிய அதிசயம்
கண்டாமே' என வியக்கின்றார்.

இந்நிலையில் அவருக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டது. "நான்" என்னும் முனைப்பு நீங்கிற்று.

'ஊன் கெட்டு உயிர்கெட்டு, உணர்வு கெட்டு
என் உள்ளமும்போய் நான் கெட்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ'.

கடைசிக் கட்டமாக, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஒருமைப்பாட்டினை எய்து கின்றார் சுவாமிகள். இதுவரை காறும் அடைய வேண்டுமென்று தேம்பித்தேம்பி அழுது நின்ற உச்சிக் கட்டத்தை அடைகின்றார். கண்டவர் விண்டிலர் என்னும் ஒரு வழக்கு இருந்தாலும், சுவாமிகள் தனது அனுபவத்தை எமக்காகச்

சொல்லிவைத்ததே அற்புதம். வேறெவராவது இவ்வுலகில் இந்த அனுபவத்தைச் சொல்லி வைத்ததாகத் தெரியவில்லையென்று சமயப் பெருமக்கள் கூறுகின்றனர்.

சீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டறக் கலக்கும் நிலையில், அவனேதானே ஆகிய ஒருதன்மை ஏற்படுகிறது. இங்கு வணங்கு கின்றவர் யார், வணங்கப்படுகின்றவர் யார் என்னும் வேறுபாடு நீங்குகிறது. சிவமாம் தன்மைப் பெருவாழ்வு எய்துவதாயிற்று. இருமை நீங்கி, ஒருமை பிறக்கின்றது. இந்த ஒரு அனுபவத்தைச் சுவாமிகள், “கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே” என ஆரம்பிக்கும், “திருப்படையாட்சி” என்னும் திருப்பதிகத்திற் சொல்லிவைத்துள்ளார்.

மீன் பொருட்டு வலைவீசிய வேடனாகிய கடவுள் வந்து நமக்கு வெளிப்பட்டு விட்டால், இரண்டு கண்களும் அவனுடைய திருவடி களைக் கண்டு மகிழ்தலும், மறந்து தானும் மண்மேல் வந்து பிறத்தலும், திருமால் அறியாத இறைவன் திருவடித் தாமரை யிரண்டையும் வழிபடுதலும், பண்ணோடு கூடிய பாடலைப் பாடுதலும் ஆடுதலும், பலவகைச் சித்திகள் வந்து கூடுதலுமாகிய பல நிகழ்ச்சி களும் நிகழா. எல்லாம் சிவம், சிவம், சிவம்.

இதுகாறும் கூறியவாற்றால் சுவாமிகள் தனது ஆன்ம ஈடேற்றத்தை மாத்திரம் நாடி நின்றார் என்று எண்ணுவது சரியாகாது. போற்றித் திரு அகவலிலே சிறந்த ஒரு வழிபாட்டு முறையைக் காட்டியருளியுள்ளார் சுவாமிகள்.

“எத்தனையோ பிறவிகள் பிறந்து ஈற்றில் ஒரு மாதா வயிற்றில் உதித்து, ஆங்கும் எத்தனையோ இடையூறுகளினின்றும் பிழைத்து, மண்மேற் பிறந்து பலப்பல துன்பங்களை அனுபவித்து, ஈற்றில், கடவுள் ஒருவர் உளர் என்னும் உணர்வுதோன்றிற்று. இந்த உணர்விற்கும் எதிராக எழுந்த இடையூறுகள் பல. எனினும் நெறிபிறழாது, இறை அன்பினை நாள்தோறும் பெருக்கிவரும் அன்பர்களுடைய தாயேயாகிய தேவரீரே வணக்கம். அரிய பொருளாயிருந்தும் அன்பர்க்கு எளிதில் வந்தருள்பவரே வணக்கம்.” இது சுவாமிகளது வணக்கத்தின் சுருக்கம். இஃதுவோர் எமக்கும் சிறப்பான வழிபாட்டு முறையல்லவா?

எமது மானுட வாழ்வோ குறுகியது. இது எந்த நேரமாவது முடிவு பெறலாம். ஆகையினாலே, “காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்” என்று எச்சரிக்கின்றார். சுவாமிகள்.

“ஆலமுண்டான் எங்கள் பாண்டிப்பிரான், தன் அடியவர்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றான். வந்து முந்துமினே”, என்று சுவாமிகள் எம்மை அழைக்கின்றார். மூல பண்டாரம் என்பது பேரின்பச் செல்வம். இதனைப் பெறுவதற்காக முந்துங்கள். மேலும் சுவாமிகள் சொல்வது, “பாண்டிப் பெரும்பதமே, முழுதுலகும் தருவான், கொடையே, சென்று, முந்துமினே.” இவற்றிற்கு நாம் ஒரு விலையும் கொடுக்க வேண்டிய தில்லை. எல்லாம் இனாமாக கொடையாகவே பெறலாம். அன்பும் ஆர்வமும் மாத்திரமே வேண்டும்.

**‘புகவே வேண்டா புலன்களில் நீர், புயங்கப்**
**பெருமான் பூங்கழல்கள்**
**மிகவே நினைமின், மிக்கவெல்லாம் வேண்டா, போக**
**விடுமின்கள்’**

இவ்வாறு அறிவுரை வழங்கிய சுவாமிகள், எமது கதி எங்கள் கைகளிலேயே உள்ளது என்பதனைத் தெளிவு படுத்துகின்றார்.

**‘தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு**
**விதிவகையும்’**

இறுதியாகத் தமது நெஞ்சுக்குச் சொல்லுவது போல ஒரு கருத்து வழங்குகின்றார்.

**‘வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு**
**ஆழ்கின்றாய்’**

நாம் வாழ்வதாகத்தான் நினைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

ஆழாமற் காப்பானை ஏத்துவதினாலேயே, நல்வாழ்வு பெறலாம்.

# குத்து விளக்கின் தத்துவம்

சுவாமி சாந்தாநந்தா

"விளக்கு" எனும் பதத்திற்கு, 'இருளை அகற்றி ஒளி காட்டுதல்' என்று பொருள். 'குத்து' என்பது 'கூறு', அல்லது 'ஒரே தன்மையுள்ள வஸ்துக்களின் கூட்டம்' என்று பொருள். உதாரணமாக ஒரு கூறு வெண்டைக்காய், ஒரு கூறு பாவற்காய், ஒரு கூறு முந்திரிக் கொட்டை என்பது போல ஆகும். ஆகையால் குத்து விளக்கு என்பதை ஒரே தன்மையுள்ள பல தத்துவங்கள் ஒன்று சேர்ந்து, இருளை அகற்றி ஒளி காட்டும் உபகரணமாகக் கூறலாம்.

மனிதன் அழியும் தேகத்தைத் தவிர வேறு அல்ல; வாழ்வு பிறப்பில் தோன்றி இறப்பில் முடிகிறது. இதற்குப் பின்னாலோ, முன்னாலே ஒன்று மில்லை. இவ்வாறு அறிகின்ற அறிவை 'ஸதூல திருஷ்டி' என்பார்கள். திருமூலர் சொன்னது போல இதுவே 'முகத்தில் கண் கொண்டு பாரக்கின்ற திருஷ்டி" ஆகும்.

தேகத்திறகு அப்பால் இயங்கும் இந்திரியங்கள் மனம்; இவைகளின் காரியங்களை அறிந்து உணர்தல்' மனோதத்துவம்' எனலாம். ஆங்கிலத்தில் இதை 'சைகாலாஜி' என்பர். இதையே முனிவர்கள், "சூக்ஷ்ம திருஷ்டி" என்பார்கள். இதற்கு அப்பால் அதாவது தேகத்திற்கும், இந்திரியங்களுக்கும் மனத்திற்கும், உயிருக்கும் அப்பால் ஒளி மயமான ஒரு சத்திய சொரூபம் இயங்குகிறது. அதை உணர்தல் "ஞான திருஷ்டி" ஆகும்.

**ஞான திருஷ்டியே முழு திருஷ்டி**
**ஞான திருஷ்டியே பரந்த நோக்கு**
**ஞான திருஷ்டியே சத்திய திருஷ்டி**

ஞான திருஷ்டியிலிருந்து மனிதனைப் பார்க்கும் பொழுது மனிதன், அவனுடைய உண்மை சொரூபத்தில் அழிவற்ற ஆத்மாவாக இருக்கிறான். அந்த அழிவற்ற ஆத்மா மனத்துடன் சேர்ந்து, இந்திரியங்களுடன் கூடி, பஞ்ச பூதங்களால் ஆன தேகத்தில் குடி புகுந்து, கர்ம வினைகளை அனுபவித்து, தேகத்தைத் துறந்து, மறுதேகம் எடுத்து, இவ்வாறாக அநேக ஜன்மங்கள் எடுத்து, கர்ம வினைகளெல்லாம் அறுத்து, கடைசியில் ஆத்மா, பரமாத்மாவில் ஒன்றுதல் .. இது தான் 'வாழ்வின் இலட்சியம்', இதுவே 'வாழ்வின் குறிக்கோள்' எனலாம்.

ஸ்தூல திருஷ்டியிலிருந்து மனிதனை பரமாத்ம திருஷ்டிக்கு அழைத்துச் செல்லுதலே சமயத்தின் குறிக்கோள் ஆகும். மஹான்கள் இந்த அடிப்படையில் குத்து விளக்கு ஆராதனையைத் தொடக்கி வைத்தார்கள்.

## குத்து விளக்கைப் பார்ப்போம்

குத்துவிளக்கு பஞ்ச உலோகத்தால் ஆன ஒரு வஸ்து ஆகும். கீழ்பீடம், தண்டு, தண்டுவில் மூன்று புடைப்புகள், மேல், பீடம், மேல் பீடத்தில் ஐந்து முகம், அதில் ஐந்து திரி; அவை நெய்யில் முழுக்கப்படுகிறது. தீபத்தை ஏற்றும் பொழுது இறைவனுடைய சந்நிதியில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் தூங்கா விளக்கிலிருந்து ஏற்ற வேண்டும் அதுதான் சம்பிரதாயம் ஆகும்.

அந்தக் குத்துவிளக்கு மேல் பாகத்தில் ஒரு ஹம்ஸபக்ஷி வீற்றிருக்கும். இவ்வாறு ஏற்றப்பட்ட குத்துவிளக்கைக் கலைக்கண்ணோடு பார்த்தோமானால், தியானத்தில் அமர்ந்திருக்கின்ற ஒரு மனித உருவம் தெரியும். கீழ்ப்பீடம், இடுப்பிலிருந்து கீழ் பாகத்தைக் குறிக்கும்; அது மடக்கி வைக்கப்பட்டது போல் இருக்கும். அதாவது மிருகத்தன்மை உள்ளிழுக்கப்பட்டு

மடக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

கீழ்ப்பீடத்திலிருந்து கிளம்பும் தண்டை, மேரு தண்டம் என்பர். அதாவது முதுகெலும்பைக் குறிக்கும் தண்டில் உள்ள மூன்று புடைப்புகள் மூன்று முடிச்சுகள் ஆகும்; அவைகளை பிரம்ம கிரந்தி, விஸ்ணு கிரந்தி, ருத்திர கிரந்தி என்று யோகிகள் சொல்லுவார்கள்.

மேல்பீடம் தலையும், ஐந்து புலன்கள் அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவியைக் குறிக்கும்; திரியானது ஜீவாத்மாவைக் குறிக்கும். நெய்யானது சாத்வீக விருத்தியுடன் கூடிய மனதைக் குறிக்கும். தீப ஒளியானது உள்நின்று ஒளிரும் பரமாத்ம சொரூபத்தைக் குறிக்கும்.

மிருகத்தன்மையை அடக்கி, ஒடுக்கி, மடக்கி, மனிதனுடைய காமக்குரோத மத மாச்சரியம் ஆய தீய எண்ணங்களை ஒழித்து, அன்பு தியாகம், சேவை என்ற நற்குணங்களுடன் கூடி, சாத்வீக குணமாக மாறும் பொழுது, இறைவனுடைய ஒளி ஜீவாத்மாவை ஒளிர்வித்து, பஞ்ச இந்திரியங்கள் மூலமாக பரமாத்ம சொருபம் ஒளிர்விடும். அப்படிப்பட்ட ஒரு மனிதன் இறைவனுடைய சன்னிதானத்தில் அமர்வதற்கு அதிகாரியாகின்றான். சமயத்தின் இலட்சியமும், யோக, ஞான மார்க்கங்களின் இலட்சியமும் இதுவேயாகும்.

"மனிதனே நீ ஒரு குத்து விளக்கு; நீ ஒரு அந்தகாரக் குகையல்ல; நீயும் உன் வாழ்வும் இறைவனுடைய ஆராதனையாகும். மிருகக் குணங்களை அடக்கி, சாத்வீக விருத்தியெனும் நெய் மூலமாக உன்னுடைய ஆத்ம சொருபம் இறைவனுடைய ஒளியால் ஒளிரட்டும். அப்படி செய்வாயானால், நீ திவ்ய ஒளியுடன் விளங்குவாய். மனிதா நீ ஒரு குத்துவிளக்கு ; தூங்காதே, எழுந்திரு, விளங்கு, விளக்கு," இதுவே குத்து விளக்கின் தாத்பரியம் ஆகும்.

**'உடம்பு எனும் மனைஅ கத்துள்**
**உள்ளமே தகளி யாக**
**மடம்படும் உணர்நெய் அட்டி**
**உயிர்எனும் திரிம யக்கி**
**இடம்படு ஞானத் தீயால்**
**எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்புஅமர் காளை தாதை**
**கழல்அடி காண லாமே'**

(திருநாவுக்கரசர் - தேவாரம்)

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'**

(திருமூலர் - திருமந்திரம்)

இதே கருத்தை வடநாட்டில் தோன்றிய கிருஷ்ண பக்தை மீராபாய் கீழ்வருமாறு சொல்லுகிறார்.

"கிருஷ்ணா! என்னுடைய தேகம் ஓர் அகல் விளக்கு; உன்மேல் நான் வைத்திருக்கும் காதல் நெய், என்னுடைய ஆத்மாவே, திரி; இந்த விளக்கின் ஒளி நீயே மீரா என்ற திரியானது காதலால் கசிந்து, எரிந்து, எரிந்து, ஒளிப் பிழம்பாகி, கண்ணன் என்ற ஒளியில், ஒளியாய்க் கலந்து ஒளி மயமாய் ஆகிறாள்."

*- நன்றி -*

பஞ்சமூர்த்தி பூஜாவிதானம்

கல்வி, தர்மம், ஆசாரம், சாஸ்திரம், பக்தி ஆகியவைகள் எந்த இடத்திலிருந்தாலும் அறிந்து கொள்ளலாம். இவற்றை அறிந்து கொள்வதற்கு ஜாதிமதம் குறுக்கே நிற்காது.

# தமிழ்ப்புலமை

ஆறுமுக நாவலர்

1. தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

2. நிகண்டு கற்று, அதனுள் அடங்கிய சொற்களையும் அவைகளின் பொருள்களையும் அறிந்துகொள்க.

3. திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலாகிய நீதி நூல்களைப் பதப்பொருளுடனே கற்றறிந்துகொள்க.

4. சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவர்களுக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகிக்கொள்க.

5. பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப்புராணம், பதினொராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக.

6. நன்னூல் விருத்தியுரை, அகப்பொருள் விளக்கவுரை, புறப்பொருள் வெண்பாமாலையுரை, காரிகையுரை, வெண்பாப்பாட்டியலுரை, தண்டியலங்காரவுரை என்னுமிலக்கணங்களைக் கற்றறிந்து, தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கண விதிகளை அமைத்துப் பழகுக.

7. இன்னும், காலம் உளதாயின், தொல்காப்பியம் இளம்பூரணருரை, சேனாவரையருரை, நச்சினார்க்கினியருரை, பிரயோகவிவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, இறையனாரகப்பொருளுரை என்னு மிலக்கணங்களையுங் கற்றறிக.

8. பூகோள நூல், ககோள நூல், அங்க கணிதம், வீச கணிதம், க்ஷேத்திர கணிதம் என்னும் நூல்களைக் கற்றறிக.

9. தருக்க நூல்களைக் கற்றறிந்து, எடுத்த விடயத்தை நியாயம் வழுவாமல் எழுதவும் பேசவும் பழகுக.

10. திருவள்ளுவர் குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையாருரை, கல்லாடம் நச்சினார்க்கினியருரை என்பனவற்றைக் கற்று, இடைவிடாது பலகாலும் உளங்கொளப் பயிலுக.

11. விசேஷ தீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவ சமய நெறியுரை, சிவதருமோத்தரவுரை, பரமத திமிரபானு, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முதலாகிய சமய நூல்களைக் கற்றறிக.

தொடரும்....

# சந்தேகம் தெளிதல்

கேள்வி : கல்யாணம் ஆகாத பெண் ஆண்டவனின் எந்தத் திருநாமத்தை உச்சரித்து வந்தால் சகல பாக்கியமும் உள்ள கணவனை அடைய முடியும்.?

பதில் : பின்வரும் திருப்புகழை ஒரு பெண் தினந்தோறும் தூய்மையுடன் உள்ளம் உருகி ஆறுமுறை பாராயணம் செய்து வந்தால் சிறந்த கணவன் அமைவான்.

**விறல்மாற னைந்து மலர்வாளி சிந்த**
**மிகவானி லிந்து வெயில்காய**
**மிதவாடை வந்து தழல்போல வொன்ற**
**வினைமாதர் தந்தம் வசைகூற**
**குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட**
**கொடிதான துன்ப மயல்தீர**
**குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து**
**குறைதீர வந்து குறுகாயோ**
**மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து**
**வழிபாடு தந்த மதியாளா**
**மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச**
**வடிவேலெ றிந்த அதிதீரா**
**அறிவால றிந்து னிருதாளி றைஞ்சும்**
**அடியாரி டைஞ்சல் களைவோனே**
**அழகான செம்பொன் மயில்மேலமர்ந்து**
**அலைவாயு கந்த பெருமாளே.**

கேள்வி : நான் இந்து மதத்தைச் சார்ந்தவன். இருப்பினும் நான் கிறிஸ்துவ மத தெய்வமான ஏசுவையும் மாதாவையும் இறைஞ்சி வருகின்றேன். நமது இந்து மதக் கடவுள்களை வணங்குவது இல்லை. இதனால் எனக்கு ஏற்படும் நிறைகுறைகளை விளக்க வேண்டுகிறேன்.

பதில் : இந்து மதத்தைச் சார்ந்த நீர் இந்துமத மூர்த்திகளை வணங்காமல் பிற மத மூர்த்திகளை வணங்குவது, பெற்ற தாய்க்கு அன்னம் போடாமல் அவமதித்து விட்டுத் தெருவில் போகின்றவர்களுக்கு அன்னதானம் செய்வதைப் போலாகும். ஆகவே, அந்தந்த மதத்திலுள்ளவர்கள் அவர்களுக்குரிய மூர்த்திகளை வணங்குவதே முறையாகும்.

கேள்வி : இந்துவாகிய நான் எம்மதமும் ஆண்டவன் முன்னிலையில் ஒன்றே என்று கருதுகின்றேன்: ஆகவே தினமும் ஒவ்வொரு மத ஆலயத்திற்கும் மாறி மாறிச் சென்று வழிபடுவது தவறாகுமா?

பதில் : ஒரு மூர்த்தியைத்தான் உபாசிக்க வேண்டும். இது ஒரு பெண் ஒரு கணவனுடன் வாழ்வது போலாகும். எல்லாக் கோயிலுக்கும் போகலாம். அங்குள்ள மூர்த்தியைத் தான் உபாசிக்கும் மூர்த்தியாகவே நினைத்து வணங்க வேண்டும். இது ஏக தேவ வழிபாடு ஆகும்.இது தான் பதிவிரத நிலை.

பதில்கள் : தெய்வத்திரு. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

உ

சிவமயம்

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப
மாசி

| | | | |
|---|---|---|---|
| 01 | 13-02-2006 | திங்கள் | மாதப்பிறப்பு |
| 04 | 16-02-2006 | வியாழன் | திருவள்ளுவர் குருபூசை |
| 05 | 17-02-2006 | வெள்ளி | எறிபத்தர் குருபூசை |
| | | | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 12 | 24-02-2006 | வெள்ளி | காரியர் குருபூசை |
| 13 | 25-02-2006 | சனி | சனிப்பிரதோஷவிரதம் |
| 14 | 26-02-2006 | ஞாயிறு | மகாசிவராத்திரி விரதம் |
| 15 | 27-02-2006 | திங்கள் | அமவாசை விரதம் |
| 16 | 28-02-2006 | செவ்வாய் | கோட்செங்கட்சோழர் குருபூசை |
| 19 | 03-03-2006 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 21 | 05-03-2006 | ஞாயிறு | சஷ்டி விரதம் |
| | | | கார்த்திகை விரதம் |
| 23 | 07-03-2006 | செவ்வாய் | கச்சியப்ப சிவாசாரியார் குருபூசை |
| 28 | 12-03-2006 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 29 | 13-03-2006 | திங்கள் | நடேசரபிஷேகம் |
| | | | மாசிமகம் |
| 30 | 14-03-2006 | செவ்வாய் | பூரணைவிரதம் |

என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின்
றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ
மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தன்ஒப் பாய்என்
அரும்பொருளே.

*– திருவாசகம் –*

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

# புத்தக விற்பனை


- திருவாதவூரடிகள் புராணம் (ம. க. வேற்பிள்ளை அவர்களின் விருத்தியுரையுடன்)
- விதியை வெல்வது எப்படி?
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்
- சைவபோதம் 1ஆம் புத்தகம்
- சைவபோதம் 2ஆம் புத்தகம்
- சைவ மகத்துவம்
- சைவசமய சாரம்
- கந்தபுராண விளக்கம்
- சிவஞானபோதம் கருத்துரையும் (ஒரு கிறித்தவ ஆய்வாளருக்கான மறுப்புரையும்)
- சுப்பிரமணியப் பெருமானுடைய திருப்பெருவடிவம்
- சைவசமய நெறி (மூலமும் உரையும்)
- சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

**ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு**

*கிடைக்கும் இடம்:*

## லக்ஷ்மி அச்சகம்

**195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.**

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

## கலையரசி

23/1, விவேகானந்த மேடு,
**கொழும்பு-13. தொ. பே: 2478885**


## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00
ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்பவேண்டிய முகவரி


*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*


Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.